ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் 11, 2004 | புரட்சி 3 | முழக்கம் 9 | விலை : ரூ.2.50

## ஆர்.எஸ்.எஸ். நிபந்தனைகளை ஏற்றார் வாஜ்பாய்

# பா.ஜ.கவுக்கு ஆதரவாக ‘சங்பரிவார்’ தேர்தல் களத்தில் இறங்குகிறது

*பாரதிய ஜனதா கட்சிக்கான தேர்தல் பணிகளில் சங்பரிவார்; முழு வீச்சாகக் களம் இறங்குகிறது. இதற்கான ஆர்.எஸ்.எஸ். தலைவர்களோடு வாஜ்பாய், அத்வானியும் ஆலோசனை களை நடத்தி திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள்.*




பிரதமர் வாஜ்பாய் இல்லத்தில் - ஆர்.எஸ்.எஸ். மூத்தத் தலைவர்கள் கடந்த மார்ச் 5 ஆம் தேதி இது தொடர்பாக பல மணி நேரம் ஆலோசனை நடத்தினர். இதன்படி அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமன் கோயில் கட்டுவது, ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு அரசியல் சட்டத்தில் 370வது பிரிவில் வழங்கப் பட்டுள்ள தனி உரிமைகளை ரத்து செய்வது; பொது சிவில் சட்டத்தை அமுல்படுத்துவது; பசுவதைத் தடைச்சட்டம் கொண்டு வருவது போன்ற சங்பரிவார்களின் கொள்கைத் திட்டங்களை பா.ஜ.க. ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று, ஆர்.எஸ்.எஸ். வலியுறுத்தியது; இதற்கு, வாஜ்பாயும், அத்வானியும் ஒப்புதல் தெரிவித்துவிட்டதாக, விவாதத் தில் பங்கேற்ற மூத்த ஆர்.எஸ்.எஸ். தலைவர் மதன்தாஸ்தேவி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; மத்திய சட்ட அமைச்சர் அருண் ஜேட்லி, பா.ஜ.கவின் எதிர்கால செயல் திட்டங்களுக்கான ஆவணம் ஒன்றை, பா.ஜ.கவுக்காக தயாரித்து வருகிறார். அந்த ஆவணத்தில், மேற்குறிப்பிட்ட திட்டங்களை இணைத்துக் கொள்ள வாஜ்பாயும், அத்வானியும் முன்வந்துள்ளனர். ஆர்.எஸ். எஸ். தனது முழு சக்தியையும் பயன்படுத்தி, தேர்தல் களத்தில் இறங்குவது என்ற முக்கிய முடிவு இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜெய்ப்பூரில் - மார்ச் 12 ஆம் தேதியிலிருந்து ஆர்.எஸ்.எஸ்சின் தலைமைக் குழுவான - அகில பாரதிய பிரதிநிதி சபா கூடி - தேர்தல் பணிகளில் பங்கேற்பது தொடர்பான திட்டங்களை, முறைப்படுத்த இருக்கிறது. நாடு முழுதுமிருந்தும், முக்கிய ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் இதில் பங்கேற்கிறார்கள். பா.ஜ.க. தலைவர் வெங்கய்யா நாயுடுவும், இதில் கலந்து கொள்கிறார்.

வாஜ்பாய் இல்லத்தில் நடந்த கூட்டத்தில், பா.ஜ.க. சார்பில் வாஜ்பாய், அத் வானி, ஜோஷி, வெங்கய்யா நாயுடு ஆகியோரும் ஆர்.எஸ்.எஸ். சார்பில் ஆர்.எஸ்.எஸ். பொதுச்செயலாளர் எச்.வி. சேஷாத்திரி, முழு நேரப் பிரச்சாரகர் மோகன் பக்வத், இணை பொதுச்செயலாளர் மதன்தாஸ் தேவி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தேர்தல் காலத்தில் - பா.ஜ.கவில் சேரும் முஸ்லீம்களைத் தக்க வைத்துக் கொள்வது என்றும், அவர்களை விரட்டி அடிக்கும் முயற்சிகளில் தேர்தல் முடியும் வரை ஈடுபட வேண்டாம் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாம். அயோத்தி பிரச்சினை பற்றி, தேர்தல் வரை பேசாமல் இருக்க வேண்டும் என்றும், ராமன் கோயில் கட்டுவதற்கு, முஸ்லீம்களின் ஆதரவு இருப்பது போன்ற கருத்தை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ஆர்.எஸ்.எஸ். இன் இந்துத்துவ திட்டங்கள் முழு வீச்சில் அமுல்படுத்தப்படும் என்பது, இதன் மூலம் உறுதியாகியிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.சின் நேரடித் தலையீட்டால், ‘தேசிய ஜனநாயக முன்னணி’க்கு சிக்கல்கள் உருவாகலாம் என்ற அச்சம் வெங்கய்யா நாயுடுவுக்கு இருந்தாலும், வாஜ்பாய், அத்வானியின் முடிவுகளையே பின்பற்ற அவர் தயாராகி விட்டார்.

வாஜ்பாய் மிகவும் மென்மையானவர்; அத்வானிதான் தீவிர இந்துத்துவாவாதி என்ற பொய்யான பிரச்சாரமும், இதன் மூலம் தவிடுபொடியாகி இருக்கிறது. ✦

## ‘மகாமக’த்தை எதிர்த்து திருச்சியில் கழகப் பிரச்சாரம்

**தி**ருச்சி மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக க. செகந் நாதன் தலைமையில் திருச்சி திருவானைக் காவல் பாரதி தெருவில் மார்ச் 2 ஆம் தேதி மாலை 5.30 மணிக்கும், திருச்சி பாபு ரோட்டில் இரவு 8 மணிக்கும் மகாமகம் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

கூட்டத்தில் செ.த.இராசேந்திரன் சிறப்புரையாற்றினார், அப்போது 1992 ஆம் ஆண்டு மகாமக குளத்தில் நடந்த நெஞ்சை விட்டு இன்னும் அகலாத கோர சம்பவத்தை நினைவுகூர்ந்தும், சமீபத்தில் தமிழ் நாட்டையே நிலை குலையச் செய்த திருவரங்கம் திருமண நிகழ்ச்சியில் ஏற்பட்ட கொடிய தீ விபத்து பற்றியும்; மற்றும் மூட பழக்க வழக்கங்கள் பற்றியும் விளக்கி பேசினார். இக்கூட்டத்தில் திராவிட மணி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். பொது மக்கள் ஆர்வத்துடன் விளக்க உரையைக் கேட்டனர்.

‘மகாமக பக்தர்களின் சிந்தனைக்கு!’ என்ற துண்டறிக்கையும் விநியோகிக்கப் பட்டது. முடிவில் செ. இரா. அன்புசெல்வம் நன்றி கூறினார்.

பொதுமக்களிடம் வழங்கப்பட்ட துண்டறிக்கையில் உள்ள தகவல்கள்:

மகாமகமாம்! பன்னிரண்டு ஆண்டு களுக்கொருமுறை கும்பகோணத்தில் அவாள் அடிக்கும் கூத்திற்குப் பெயர் மகா மகம். இது முழுக்க, முழுக்க மூடநம்பிக்கை விழா! இவ்விழா அவாள் தம் பிழைப்புக்காக, நம்மவர்களை சுரண்டி தின்பதற்காக செய்த சூழ்ச்சி!

அறிவியல் வளர்ந்துள்ள இக்கால கட்டத்தில் சென்ற மகாமகத்தில் ஏற்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகளை நினைத் தாலே நம் நெஞ்சம் பதறுகிறது! நமக்கு ஏற்படும் வேதனை, இரக்கத்தில் ஒரு சிறு பகுதிகூட கருணையே வடிவான கடவுள் எதற்கும் ஏற்படவே இல்லை; (இருந்தால் தானே ஏற்படும்). வாதத்திற்காக ஆஸ்திகர் களின் நம்பிக்கையையொட்டித்தான் இக் கேள்வியை அவர்கள் சிந்தனைக்கு வைக்கிறோம்.

மகாமகக் குளத்தில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும் என்று நம்பும் தமிழர்களுக்கு, மகாமக குளத்திற்கு அவன் (இறைவன்) சக்தியால் அல்லவா நீர் நிரம்பியிருக்க வேண்டும்? மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடுவதேன்? அப்படி என்றால் மேட்டூர் தண்ணீர் புனித தீர்த்தமா?

12 ஆண்டுகளாகச் செய்த பாவங்கள் எல்லாம் கும்பகோணம் மகாமகக் குளத்தில் மூழ்கினால் போய்விடும் என்றால் மனிதர்கள் பாவங்கள் செய்ய தயங்கு வார்களா? காஞ்சி சங்கராச்சாரி மடத் தலைவர்கள் செய்த பாவம் என்ன, மகாமக குளத்தில் நீராட!

இந்த குளத்தில் பல ஆயிரக்கணக்கில் ஆணும், பெண்ணும் இறங்கி நீராடி கரை யேறிட பல மணி நேரம் ஆகும் என்ற நிலை யில் பல்வேறு சிறுநீரகப் பிரச்சினைகள் உள்ளவர்கள், குழந்தைகள், எங்கே போய் சிறுநீர் கழிப்பார்கள்? யதார்த்த நிலையை எண்ணிப் பாருங்கள்?

21 ஆம் நூற்றாண்டிலிருந்து 22-ம் நூற்றாண்டுக்குச் செல்ல வேண்டிய நாம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுச் செல்வது அந்தோ கொடுமை! அயல்நாட்டில் செவ்வாய் கிரகத்தில் மனிதன் குடியேற முயற்சி செய்யும் போது நாம் மகாமக குளத்திற்கு ரூ.50 கோடி செலவு செய்வது நியாயமா?

பொதுமக்களே, இளைஞர்களே, நடுநிலையாளர்களே சிந்தியுங்கள்.

வெளியீடு: தந்தை பெரியார் திராவிடர் கழகம், திருச்சி மாவட்டம்.

### மாநில கலந்துரையாடல் கூட்டம்

தந்தை பெரியார் திராவிடர் கழக மாநில அளவிலான கலந் துரையாடல் கூட்டம் 28.3.2004 அன்று ஈரோடு நகரில் நடக்க இருக்கிறது. (இடம் பின்னர் அறிவிக்கப்படும்)

கழகப் பொறுப்பாளர்கள் - தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கொளத்தூர் மணி (தலைவர்)
கோவை இராமகிருட்டினன்,
விடுதலை ராசேந்திரன்
(பொதுச்செயலாளர்கள்)

புரட்சி 3 | மார்ச் 11, 2004 | முழக்கம் 9

## புலிகள் இயக்கத்தில் என்ன நடக்கிறது?

ஈழத்தில் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் இணைந்த தமிழர்களின் தாயகத்தைக் கூறு போடுவதற்கான முயற்சிகள் நீண்டகால மாகவே சிங்களப் பேரினவாத சக்திகளால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளை தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து முறியடித்து வந்துள்ளார்கள். அண்மைக்காலமாக, நார்வே நாட்டின் முயற்சியாலும், இலங்கையில் ரணில் தலைமையிலான ஆட்சியின் அணுகுமுறை மாற்றங்களாலும், விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு, அமைதி பேச்சு வார்த்தைகள் துவங்கின. அதே நேரத்தில், இந்தப் பேச்சு வார்த்தையை சீர்குலைக்கும் முயற்சிகளும் தொடர்ந்தன. இதில் முன்னணியில் நின்றவர் அதிபர் சந்திரிகா. அவருக்கு இந்தியாவின் பின்பலமும் ரகசிய ஆதரவும் இருக்கிறது. ஆனாலும் இந்த சதித் திட்டங்களுக்கு பலியாகக்கூடாது என்பதில் விடுதலைப்புலிகள் இயக்கம் மேற்கொண்ட உறுதியான அணுகுமுறையால், சூழ்ச்சித் திட்டங்கள் வெற்றி பெறாமல் போயின. தனது இறுதித் துருப்புச் சீட்டாக - சந்திரிகா, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, தேர்தலை அறிவித்தார்; இதிலும், சந்திரிகாவை அரசியல் ரீதியாக முறியடிக்க விடுதலைப்புலிகள் தயாரானார்கள்.

ஏப்ரல் 2 ஆம் தேதி நடக்கவிருக்கும் தேர்தலில், அய்ந்து கட்சிகள் அடங்கிய 'தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி' வேட்பாளர்களை முழுமையாக ஆதரித்து, வடக்கு - கிழக்கு மாநிலங்களில் போட்டியிடும் முன்னணி வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றிபெற வைத்து, மீண்டும் ரணில் ஆட்சி அமைவதற்கான அடித்தளத்தை உருவாக்கும் முயற்சிகளில் புலிகள் இயக்கம் இறங்கியுள்ளது. இந்த சூழ்நிலையில் தான் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான விடுதலைப்புலிகளின் ராணுவத் தளபதி கருணா, விடுதலைப்புலிகள் தலைமைக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார். சிங்களப் பேரினவாத சக்திகள் ஏற்கனவே கையில் எடுத்து, தோற்றுப் போன 'வடக்கு-கிழக்கு'த் தமிழர்களைப் பிளவு படுத்தும் கருத்தாயுதத்தை, இப்போது, தேர்தல் வர இருக்கும் சூழலில், விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதியாக இருந்த ஒருவரே, கையில் எடுத்திருப்பது, பலவித சந்தேகங்களை உருவாக்கியிருக்கிறது.

- ஈழத் தமிழர்களுக்கான சமரசப் பேச்சு வார்த்தைகள், இன்னும் முறையாகத் துவங்கப்படாத காலகட்டத்திலேயே இந்தப் பிரச்சினையை இப்போது எழுப்ப வேண்டிய அவசியம் என்ன வந்திருக்கிறது?
- வளர்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதில் அரசு தந்த உறுதிப்படி செயல்படாததால் வடக்கு-கிழக்கு மாநிலங்கள் இரண்டுமே புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதே உண்மை. சர்வதேச அரங்குகளில், விடுதலைப்புலிகள் இயக்கமே, இதை சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறது. மட்டக் களப்பு தளபதியான கருணாவும்கூட, பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் இதைத் தான் வலியுறுத்தினார். இப்போது, தனது மட்டக் களப்பு, அம்பாறை பகுதி மட்டும் புறக்கணிக்கப்படுவதாக, கூறுவது ஏன்?
- வடக்கு-கிழக்கு மாநிலத்தில் தேர்தல் முறையாக நடைபெற வேண்டும் என்பதில் கவனமாக இருக்கும் விடுதலைப்புலிகள், அங்கே வேட்பாளர்களை ஏன் சுட்டுக் கொல்ல வேண்டும்? தேர்தல் முறையாக நடக்கக் கூடாது என்று சீர்குலைக்க விரும்பும் சக்திகள் தானே, இந்த நடவடிக்கைகளில் இறங்கியிருக்க முடியும்?

இந்த நியாயமான கேள்விகளைப் புறக்கணித்து விட முடியாது.

இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் யார் என்பதை கண்டறியும் முயற்சிகளில், விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவு இறங்கியுள்ளதாக, புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் ராணுவப் பிரிவு பொறுப்பாளர்கள் சுமார் 70 பேர், கிளிநொச்சிக்கு வந்து, கருணாவின் நடவடிக்கைகளைத் தாங்கள் ஆதரிக்கவில்லை என்று, செய்தியாளர்களிடம் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். கருணா இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டாலும், அவர் மீது மரண தண்டனை எதுவும் விதிக்கப்படாது என்று விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், தம்மை சந்திக்க வந்த, கிறிஸ்தவ பாதிரியார்கள் குழுவிடம் உறுதி அளித்துள்ளார்.

கருணா போன்ற வீரர்களின் தியாக வரலாற்றை ஈழ வரலாற்றில் மறைக்க முடியாது; ஆனாலும் அது துரோகமாக வடிவெடுக்கும் போது, அதை எப்படி அங்கீகரிக்க முடியும்?

வடக்கு-கிழக்கில், முறையாகத் தேர்தல் நடந்து, தமிழர் பிரதிநிதிகள் வெற்றி பெற்று விட்டால், மீண்டும் ரணில் தலைமையிலான ஆட்சி ஏற்பட்டு சமரசப் பேச்சு வார்த்தைகள் துவங்கி விட்டால், அதன் மூலம் சந்திரிகாவின் குழப்பங்களுக்கு ஒரு நிரந்தர முடிவு ஏற்பட்டு விடும். இதை சீர்குலைக்க விரும்பும் சக்திகள், இறுதி முயற்சியாக, இந்த சதித் திட்டங்களை, கருணாவின் மூலமாக அமுல்படுத்தப்படுவதாகவே தெரிகிறது. வழக்கம் போல 'இந்து' ஏடும், பார்ப்பன ஊது குழல்களும் இந்த கொம்பு சீவி விடும் "திருப்பணிகளை"த் தீவிரமாக செய்து வருகின்றன.

சோதனைகளைக் கடந்து-தடைகளைத் தகர்த்து-முன்னேறிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களும், அவர்களின் பிரதிநிதியான விடுதலைப்புலிகளும், இந்த சூழ்ச்சிகளையும் தகர்ப்பதில் வெற்றி பெறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்!

**- புரட்சிப் பெரியார் முழக்கம் 11.03.2004**

# "மானம் காத்த மறவர்கள்"

# கழகத்திற்கு 'முகம்' இதழின் பாராட்டு

'முகம்' மாத இதழ் கழகத்தின் போராட்டம் குறித்து இவ்வாறு எழுதியிருக்கிறது.

பெரியார், அண்ணாவுக்குப் பிறகு சுயமரியாதை இயக்க இன உணர்வு நீர்த்துப் போச்சென்று சிலர் புலம்ப, 'ஆமாம், ஒழிந்தார்கள் கறுப்புச் சட்டைக் காரர்கள் !' என்று காவிக்காரர்கள் எம்பிக் குதிக்க, மீண்டும் பெரியாரியலைத் தூக்கிப் பிடித்துள்ளனர் பெரியார் திராவிடர் கழகத்தினர், கருஞ்சிறுத்தை கொளத்தூர் மணி தலைமையில்

பெரியார் தம் இறுதி நாளில் நடத்தவிருந்த போராட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டனர், பெரியாரின் வாரிசு என வந்தோரெல்லாம் !

இந்த அவல நிலையை மாற்றத்தான் 30.01.2004 அன்று காஞ்சியில் பல்லாயிரம் சுயமரியாதை உணர்வுள்ள தமிழர்கள் திரண்டனர், காஞ்சி காமாட்சிக் கோவிலில் நுழைந்து வழிபட !

தமிழன் கட்டிய கோயில் ! அவன்தான் மண் சுமந்தான்; கல்சுமந்தான்; சிலை வடித்தான்; பணமும் கொடுத்தான். கட்டி முடித்து மணியடிக்க ஒருவரை வேலைக்கு அமர்த்தினான்.

வேலைக்கு வந்தவன் 'தமிழ்' சூத்திரமொழி, அதில் வழிபாடு நடத்த மாட்டேன், என் மொழி செத்த மொழியான போதிலும் அதில் தான் வழிபாடு நடத்துவேன் என்று சொன்னால் அதை இவ்வளவு காலம் பொறுத்துக் கெண்டு அவனுக்குச் சம்பளமும், தட்சணையும் கொடுத்துக் கொண்டிருப்பது மானக்கேடு அல்லவா !

இந்த அவமானத்தைத் துடைத்தெறிய தடையை மீறி, சிறை சென்ற 860 பேரையும் 'மானங்காத்த மறவர்கள் !' எனப் பாராட்டி மகிழ்கிறோம் !

புரோகிதர்களும் வீட்டில் தமிழில்தான் பேசுகிறார்கள். 'தமிழ் தான் தங்கள் தாய்மொழி' என்றும், ஆங்கிலம் போல் வடமொழியும் தங்களுக்குப் 'பிழைப்பு மொழி' என்றும் உணரும் நிலை வரவேண்டும் !

நன்றி: **'முகம்' இதழ்** மார்ச்சு, 2004

## புதுவையில் கலப்புத் தம்பதிகளுக்கு பரிசுகள்!

புதுச்சேரி கழகத்தின் சார்பில் காதலர் தின விழா கொண்டாடப்பட்டது. வைசியர் வீதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேராசிரியர் பெரியார் தாசன், கவிஞர் அறிவுமதி, வழக்கறிஞர் வீ.அழகரசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். கழகத்தின் புதுவை தலைவர் லோகு. அய்யப்பன் தலைமை தாங்கினார். கோகுல் காந்திநாத், வீர.மோகன், சு.அகிலன், சா. சார்லஸ், ம. இளங்கோ, இர. தந்தைப் பிரியன், சி. சிவபெருமாள், செ.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மக்கள் உரிமை கூட்டமைப்பு செயலாளர் கோ.சுகுமாறன் தொடக்க உரை ஆற்றினார். நகரத் தலைவர் லூ. அமலன் நன்றி கூறினார். காதலித்து கலப்பு மணம் செய்து கொண்ட 30 தம்பதிகளுக்கு கழகச் சார்பில் கவிஞர் மீராவின் கவிதை நூல்களும், சால்வைகள், பூங்கொத்தும் அளித்து சிறப்பு செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். ✦

## பிளஸ் டூ தேர்வில் முதலாவது மாணவிக்கு முகவை மாவட்டக் கழக சார்பில் ரூ.2000

இராமேசுவரத்தில் தந்தை பெரியார் 125 வது பிறந்தநாள் விழா கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் அனைத்துக் கட்சி தோழர்களும் கலந்து கொண்டனர். இராமேசுவரம் பேரூராட்சி தலைவர் ஏ.எஸ்.எம். சேகர் காங்கிரஸ் கட்சியின் வட்டாரத் தலைவர் கே.பாரிராஜன் மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் என். கலையரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வட்ட செயலாளர் சேது, முருகானந்தம், 'புதிய தடம்' ஆசிரியர் குழுவைச் சார்ந்த அசோக் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். மாவட்டத்தில் 'பிளஸ் டூ' தேர்வில் முதல் மாணவியாக வந்த இராமேசுவரம் மாணவி சுமதிக்கு பெரியார் விருதும், ரூ.2000/- ரொக்கப் பணமும் மாவட்டக் கழக சார்பில், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வழங்கினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பெரியார் தி.க. மாவட்டத் தலைவர் க.நாகேசுவரன், மாவட்ட செயலாளர் நா.ரவிச்சந்திரன் ஆகியோர் செய்து இருந்தனர். பெரியார் சுதன் நன்றி கூறினார். ✦

## 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு பாராட்டு!

நான்கு பக்க அளவினதே என்றாலும் ஏட்டில் அடர்த்தியான செய்திகள் இடம் பெறுகின்றன. தோழர்களுக்கு அறிவு கொளுத்தும் செறிவு மிக்க கருத்துகள் தொடர்ந்து வெளி வருகின்றன. 'கருவறை நுழைவுப் போராட்டம் ஏன் ?', 'சிந்து சமவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமா ?' போன்றவை எளிமையாய் புரிந்து கொள்ளும் வண்ணம் சிறப்பாக உள்ளன. ஆசிரியர் உரைகளும் அருமை. திருப்பூரில் தோழர் சுப்பராயன் உரை, பழனி மாநாட்டில் புலிப்பாணி அடிகள் பேச்சு ஆகியவற்றை முழுமையாக வெளியிடுவது எம் போன்றோர்க்குப் பயனுள்ளதாய் உள்ளது. பெட்டிச் செய்திகளும் சுவையூட்டுகின்றன.

**~ தமிழேந்தி, அரக்கோணம்.**

"புரட்சிப் பெரியார் முழக்கம்" அருமையாகவும், பெரியார் நம்முடன் இருந்து வருவது போலவே இருக்கிறது. என் மன மகிழ்ச்சியையும், மன நிறைவையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**~ கே.எல்.ராமமூர்த்தி சென்னை.**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
புத்துணர்வைக் கொடுக்கிறது !
தமிழினத்தைத்
தட்டி எழுப்புகிறது !
தடம் மாறாமல்
இலக்கை நோக்கிப் பாய்கிறது !
வெல்க, புரட்சி பெரியார் முழக்கம் !

**~ பாவை, 'குறளியம்' திங்களிதழ்.**

### வரப்பெற்றோம்

நூல்: புத்தரின் சிந்தனைகள்,

ஆசிரியர்: கே.எல். ராமமூர்த்தி விலை ரூ.40

கிடைக்குமிடம்: **சத்தியா பதிப்பகம்,** 15 கட்ட பொம்மன் மெயின் ரோடு, ஆர்.வி.நகர் அஞ்சல், சென்னை-118.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041. தொலைபேசி: 2451 2857, 2847 4830

### காரைக்காலில் பெரியார் சிலை அமைப்புக் குழு

புதுவை மாநிலம் காரைக்காலில் தந்தை பெரியார் சிலை அமைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. கழக மாவட்ட செயலாளர், பொறியாளர் ந.க. சரவணன் முன் முயற்சியாலும், காரைக்கால் வர்த்தக சபை, தலைவர் நாராயணசாமி அவர்களின் மிகுந்த ஈடுபாடு காரணமாகவும் பெரியார் சிலை அமைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அமைப்புக் குழு கூட்டம் கடந்த 28.02.2004 மாலை காரைக்காலில் நடைபெற்றது. பல்வேறு அரசியல் கட்சிகளின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். கழகத்தின் மாவட்ட தலைவர் தமிழ்மா. இரங்கயை, மாவட்ட செயலாளர் பொறியாளர் ந.க.சரவணன் ஆகியோர் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். காரைக்கால் தெற்குப் பகுதி சட்டமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், துணை சபாநாயகருமான ஏ.வி.சுப்ரமணியன், காரைக்கால் வடக்குப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு.கவை சேர்ந்த ஏ.எம்.எச். நாஜிம் ஆகியோர் கவுரவ தலைவர்களாக இருந்து சிலை அமைய ஒத்துழைப்பு அளிக்க உறுதியளித்துள்ளனர்.

### மறைந்த தோழர் இராமசாமி படத்திறப்பு

கழக அறிவியல் வாழ்வியல் குழு உறுப்பினர் தோழியர் இரா.சாந்தி அவர்களின் தந்தையார் இராமசாமி அவர்கள் 22.01.04 அன்று மேட்டூர் அணையில் முடிவெய்தினார். 40 ஆண்டுகளுக்கு முன்பே சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்டவர் திரு.இராமசாமி.

எவ்வித சடங்கும் இன்றி உடலடக்கம் நடந்தது. பாரதி நகரில் 24.1.04 அன்று அவரது படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் தா.செ. பழனிச்சாமி, மாவட்ட பொருளாளர் ஆசிரியர் கிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் முல்லை வேந்தன், டைகர் பாலன், கோபி இராம. இளங்கோவன் மற்றும் மாவட்டம் முழுவதிலிருந்தும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி 27.01.04 அன்று தோழியர் சாந்தி அவர்களின் இல்லத்திற்கு சென்று அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார்.

### மேட்டூரில் பிரச்சாரக் கூட்டங்கள்

24.01.04 அன்று மேட்டூர் அணை பகுதிகளில் கருவறை நுழைவு கிளர்ச்சி விளக்க தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு பெரிய பூங்காவில் தொடங்கி, காவேரி பாலம், ஒர்க்ஷாப் கார்னர், குமரன் நகர், அரசு மருத்துவ மனை எதிரில், மார்க்கெட் பகுதி, காவேரி நகர், இராஜகணபதி நகர், ஆண்டிக் கவுண்டன் நகர், தெர்மல் 4 ரோடு, தூக்கணாம்பட்டி, பழைய மார்க்கெட் பகுதி, சிறிய பூங்கா, சதுரங்காடி, இரவு 9 மணிக்கு பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது. அனைத்து பகுதிகளிலும் மாவட்ட அமைப்பாளர்கள் முல்லை வேந்தன், டைகர் பாலன் விளக்க உரையாற்றினார்கள்.

### சந்துரு - பூங்கோதை வாழ்க்கை ஒப்பந்தம்

மயிலாடுதுறை கழகத் தோழர் சந்துரு எனும் சந்திரசேனனுக்கும் - தோழர் பூங்கோதைக்கும் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா 5.3.2004 வெள்ளி காலை 9 மணியளவில் ஏ.எம்.ஆர். கிருஷ்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி திருமணத்தை நடத்தி வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாழ்த்துரை வழங்கினார். மணமகள் தந்தை மறைந்த மா.கலியமூர்த்தி - கொக்கூரில் திராவிடர் கழகத்தில் தீவிரப் பணியாற்றியவர். மணவிழாவில் திராவிடர் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். நாக. இரகுபதி (பெரியார் மய்யம்) வரவேற்புரை நிகழ்த்தினார். பெரியார் முழக்கம் வளர்ச்சிக்காக மணமக்கள் சார்பில் ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

# 'அய்ஸ்' மழையில் நனைகிறார் டாக்டர் வீரமணி!

நல்ல பிள்ளையாகவே குடும்பத்தில் வாழ்கிறவனைவிட, தவறு செய்துவிட்டு, வீட்டை விட்டு ஓடிப் போய், 'இனிமேல், தவறு செய்ய மாட்டேன்' என்று ஒப்புதல் வாக்கு மூலத்தோடு, வீட்டுக்குத் திரும்பி வரும் பிள்ளைகளுக்கு வரவேற்பும் பாராட்டும் அதிகமாக இருக்கும்! அத்தகைய பாராட்டு மழையில் இப்போது மூழ்கிக் கொண்டிருக்கிறார் டாக்டர் வீரமணி! 'தாய்க் கழகத்தின்' தலைவராகக் கூறப்படும் டாக்டர் வீரமணிக்கு, பாராட்டு மாலைகள் குவிந்து கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? வாஜ்பாய் தலைமையிலான இந்துத்துவா ஆட்சியை ஆதரிக்க மாட்டோம் என்று அவர் அறிவித்தது தான்!

"பொதுவுடைமைக் கட்சியாளர்களே! சபாஷ்! முதலாளித்துவத்தை இனி உறுதியாக எதிர்க்கப் போகிறோம் என்ற, புரட்சிகரமான முடிவு எடுத்துவிட்டீர்களே! இத்தகைய துணிவு, யாருக்கு வரும்? காரல் மார்க்சுக்குப் பிறகு, இப்படி ஒரு துணிவான முடிவை, உங்கள் தலைமையில் நடக்கும் கம்யூனிஸ்ட் கட்சி தான் எடுத்திருக்கிறது. இது வரலாற்றுத் திருப்பம்! சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய முடிவு; எதிர்காலத்தில் கல்வெட்டில் செதுக்கப்படவேண்டிய ஆவணம்! பாராட்ட வார்த்தைகளே இல்லை; ஒரு பொதுவுடைமைக்காரர், முதலாளித்துவத்தை எதிர்ப்பேன் என்று கூறுவது என்றால், அது என்ன அவ்வளவு சாதாரண பிரச்சினையா? சபாஷ்! வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்" - இப்படி பொதுவுடைமைக் காரர்களைப் பாராட்டினால், எப்படி இருக்கும்? "ஆகா, எவ்வளவு பாராட்டுகள் எனக்கு குவிகின்றன" என்ற, எந்த பொது வுடைமைக்காரரும் இதற்காக மகிழ்ச்சிக் கூத்தாட மாட்டார்கள்! கொள்கை உணர்வுள்ள சராசரி மனிதர் எவரும், கடந்த காலத்தில் செய்த தவறை, இப்படிக் குத்திக்காட்டி அவமானப்படுத்துகிறார்களே என்று வெட்கித் தலைகுனியவே செய்வார்கள்! அத்தகைய பாராட்டுகள் தான் - இப்போது டாக்டர் வீரமணிக்கும் குவிந்து கொண்டிருக்கின்றன; 1996-ல் பார்ப்பனியத்துக்கு ஆதரவாக - டாக்டர் வீரமணி தடம் புரண்ட போதே, இந்த ஆபத்தை உணர்ந்த தோழர்கள், கொள்கையைத் தட்டிக் கேட்டு, வெளியேறி - பெரியார் திராவிடர் கழகத்தை உருவாக்கினார்கள்; 1996 முதல் - ஜெயலலிதா பாஜகவுடன் கூட்டணி அமைக்கும் காலம் வரை - வீரமணியார் - அவரை மதச்சார்பற்ற அணியின் தலைவியாகவே வர்ணித்து வந்தார்.

சங்கராச்சாரியின் ஆட்சியை நடத்தி வந்த ஜெயலலிதாவை - கண்களைக் கட்டிக் கொண்டு ஆதரித்தார்! இந்து அறநிலையத் துறையின் அறிவிக்கப்படாத அமைச்சராக சங்கராச்சாரி செயல்படுவதை தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து சுட்டிக்காட்டி எதிர்ப்பு தெரிவித்த போதெல்லாம் - வாயில் பிளாஸ்திரி போட்டு ஒட்டிக் கொண்டு, 'அம்மாவைப் பாராட்டுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதா என்று காத்திருந்த டாக்டர் வீரமணி - இப்போது, 'ஜுனியர் விகடன்' இதழுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

> "இந்து அறநிலையத் துறையையே, இந்து மதப் பரப்பு துறையாக இந்த ஆட்சி மாற்றிவிட்டது வெளிப்படையாகச் சொல்லிச் செய்யும், இந்துத்துவா ஆட்சியைவிட, இது மோசமான ஆட்சி" -(ஜீவி. 10.3.2004)

- என்று ஒப்புதல் வாக்கு மூலம் தந்திருக்கிறார்!

கடந்த 4 ஆண்டு காலமாக - ஜெயலலிதா பார்ப்பன ஆட்சியின் 'இந்துத்துவ' நடவடிக்கைகளுக்கு துணை போன துரோகத்தைச் செய்துவிட்டு - அதற்கு சிறு வருத்தம்கூட தெரிவிக்காமல், இப்போது ஒப்பதல் வாக்கு மூலங்களைத் தந்து கொண்டு, 'தாய்க்கழகம்' என்ற அங்கீகாரத்தை மட்டும் பெறத் துடிக்கிறார்கள்!

### நமது பார்வையில்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவுக்காக, தீவிரப் பிரச்சாரம் செய்தார் டாக்டர் வீரமணி! ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலைக்கூட அவர் விடவில்லை! இப்போது, திராவிடர் கழகத்துக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. வலியச் சென்று பிரச்சாரம் செய்ய மாட்டோம் என்கிறார். அடுத்த வரியிலேயே - பொது வாழ்க்கையில் மான அவமானம் பார்க்கக்கூடாது என்றும், முன்னுக்குப் பின் முரணாகக் கூறுகிறார். எப்படியோ! இனியாவது பெரியார் கொள்கைகளுக்கு துரோகம் செய்யாமல் இருந்தால் சரி என்பதுதான் இனஉணர்வுள்ள தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இதற்காக நாமும், ஒரு பொன்னாடையைப் போர்த்திப் பாராட்ட தயாராகவே இருக்கிறோம்!

## சிரிப்பு நடிகரின் பார்ப்பனத் திமிர்!

எஸ்.வி.சேகர் எனும் பார்ப்பன நடிகர் - சங்கராச்சாரி போகுமிடமெல்லாம் அவரது செயலாளரைப் போல் உடன் போய்க் கொண்டிருக்கிறவர். அவர் இப்போது தென்மண்டல தணிக்கைக்குழு உறுப்பினராக, வாஜ்பாய் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். விஜய் தொலைக்காட்சியில் தொடர் நிகழ்ச்சியை நடத்தி வரும் இந்தப் பார்ப்பனர் அவ்வப் போது, பெரியார் தொண்டர்களை சீண்டி வருகிறார். "கடவுள் இல்லை என்று சொல்லுகிற கூட்டத்துக்கு, கோயிலில் யார் அர்ச்சகராக வந்தால் என்ன?" என்று ஒருமுறை தொலைக்காட்சியில் திமிரோடு கேட்டார். பேட்டி காண்போரை எல்லாம், 'எகத்தாளமாக'ப் பேசுவது இவரது வாடிக்கை. ஆனால் அண்மையில், ஜெயேந்திர சரசுவதியை இவர் பேட்டி கண்டபோது, சரிசமமாக உட்காராமல் அவரது காலடியில் உட்கார்ந்து கொண்டு பேட்டி கண்டார்.

"இங்கே நடப்பது பெரியார் ஆட்சியா? பெரியவாள் ஆட்சியா என்று ஒரு அரசியல் வாதி சொல்கிறார்; அதற்கு உங்கள் பதில் என்ன?" என்று எஸ்.வி. சேகர் கேட்க, "இரண்டும் இல்லை; இது மக்களோட ஆட்சி" என்று, ஜெயேந்திர சரசுவதி பதில் சொல்கிறார். ஜெயலலிதாவின் பார்ப்பன ஆட்சிக்கு சங்கராச்சாரி வாய் மூலம், ஒரு பாராட்டுப் பத்திரத்தை வாங்கித் தந்திருக்கிறார் இந்தப் பார்ப்பனர். கோவையில் கலகக்காரர் பெரியார் நாடகத்துக்கு, நகராட்சிக் கலையரங்கம் அனுமதி மறுத்தது. அதற்கு முன், அதே அரங்கத்தில், இந்தப் பார்ப்பன நடிகரின் நாடகம் நடந்தது; நாடகம் முடிந்து, பார்ப்பனர் பேசுகையில் - "மக்கள் வரிப்பணத்தில் நடக்கும் நகராட்சி அரங்கில், பெரியார் நாடகத்தைப் போட அனுமதிக்கக் கூடாது; பொது மக்கள் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்" என்று பேசினாராம். தமிழ்நாட்டில் - தமிழர்களுக்காகவே தனது இறுதி மூச்சு அடங்கும் வரை உழைத்த ஒரு தலைவரைப் பற்றி, இந்தக் கழிசடைப் பார்ப்பனர்கள் எல்லாம், இப்படிப் பேசக் கிளம்பியிருக்கிறார்கள். சேலத்தில் 'ராமனை'ப் பதம் பார்த்த ஆயுதத்தைத்தான் இவர்களுக்கு எதிராக, இனி கையில் எடுக்க வேண்டும்! பார்ப்பனக் கொழுப்பு, எல்லை மீறும் போது, வேறு என்ன செய்வது?

## "அரவாணி"களின் உரிமைக்குரல்!

'அரவாணிகள்' - அடிப்படை உரிமைகளே இல்லாதவர்களாக நடத்தப்படுவது மிக மோசமான மனித உரிமை மீறலாகும்; அவர்களை மனிதர்களாக அங்கீகரிக்க மறுப்பதில் எந்த நியாயமும் இல்லை. குழந்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் பெற்றவர்கள் தான் இந்த நாட்டின் குடிமக்களாக இருக்க முடியுமா? அப்படியானால், குழந்தை இல்லாதவர்களை எல்லாம், குடிமக்கள் இல்லை என்று அறிவித்து விடுவார்களா? பாலியல் அடையாளங்களைவிட, மனித அடையாளங்களே, மிகவும் முக்கியமானவை. அரவாணிகளும், மனிதர்கள் தான்! அவர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டிருப்பதும், வாக்காளர் அட்டைகள் வழங்கப்படாததும், வாழ்வுரிமைகளை மறுப்பதும், ஜனநாயகத்துக்கான அடையாளங்கள் அல்ல; உலக மகளிர் நாளில் மதுரையில் 'அரவாணிகள்' தங்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். அரவாணிகள் பற்றிய சமூகத்தின் பார்வை மாற வேண்டும்; சக மனிதர்களை சாதியப் பார்வையோடு, சமமாகப் பார்த்துப் பழக்கப் படாத, இந்து பார்ப்பன சமூகம், 'அரவாணிகளை' மனிதர்களாகவே அங்கீகரிக்க மறுக்கிறது. இது வேதனைக்குரியது. அரவாணிகளின் மனித உரிமை கோரிக்கைகளை - நாம் ஆதரிக்கிறோம்! அவர்களின் உரிமைக்காகப் போராட முன் வந்துள்ள அமைப்புகளைப் பாராட்டுகிறோம்!

## ஜம்மு காஷ்மீரில் ஒரு சட்டம்

காஷ்மீரைச் சேர்ந்த பெண்கள், வெளி மாநிலத்தவரைத் திருமணம் செய்து கொண்டால், அவர்கள் அம்மாநிலத்தில் நிரந்தரக் குடியுரிமையை இழப்பார்கள்; அவர்கள் காஷ்மீரில் எந்த சொத்துக்களையும் வாங்க முடியாது என்று காஷ்மீர் சட்டப் பேரவை ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. சட்ட மேலவையில் இம்மசோதா இன்னும் நிறைவேறவில்லை. இந்த சட்டத்துக்கு, கடும் எதிர்ப்புகள், காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. தரப்பிலிருந்து எழுந்துள்ளன. ஏற்கனவே ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நிர்வாக ஆணை மூலம், இது அமுல் படுத்தப்பட்டு வந்தாலும், 2002ல் ஜம்மு காஷ்மீர் உயர்நீதி மன்றம், ஒரு வழக்கில் இந்த ஆணையை ரத்து செய்தது; ஜம்மு காஷ்மீர் பெண்களுக்கு மட்டும் இப்படி ஒரு சட்டமா? காஷ்மீர் மாநில ஆண்கள், வெளி மாநிலப்பெண்களைத் திருமணம் செய்தால், அவர்களுக்கும் இந்த சட்டம் பொருந்த வேண்டாமா? இதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி! ஜம்மு காஷ்மீர் மாநிலம், இந்தியாவுடன் 'தற்காலிகமாக' இணைக்கப்பட்ட போது, அம்மாநிலத்தின் தனி உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு உறுதிகள் தரப்பட்டன. இதன்படி அரசு வேலை வாய்ப்புகள், தொழிற் கல்விகளில் மாணவர் சேர்க்கை; சொத்து வாங்குதல் போன்ற உரிமை, காஷ்மீர் மாநிலத்தவருக்கு மட்டுமே உண்டு! ஆனால் காஷ்மீர் பெண்களைத் திருமணம் செய்துக் கொண்டு, வெளி மாநிலத்தவர்கள், காஷ்மீருக்குள் சொத்துகளை வாங்கி குவிக்கத் தொடங்கியதால் தான், பிரச்சினைகள் வெடிக்க ஆரம்பித்தன. மலேசியாவிலும், இதே போல், மலேசிய நாட்டுப் பெண்களை மட்டும் தனிமைப்படுத்தும் ஒரு சட்டம் இருக்கிறது. அதே நேரத்தில் மலேசிய குடிமகன், வேறு நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துக் கொண்டால், அந்தப் பெண்ணுக்கு மலேசிய குடி உரிமையையே வழங்கிவிடுகிறார்கள். இப்போது காஷ்மீரில் செய்யப்படவேண்டியது எல்லாம் சட்டத்தில் உள்ள ஆண்-பெண் வேறுபாடுகளை நீக்குவதைத் தவிர, ஏற்கனவே காஷ்மீர் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ள தனி உரிமைகளைப் பறித்து விடுவது அல்ல. காஷ்மீரின் தனித் தன்மையை படிப்படியாக ஒழித்துவிட வேண்டும் என்று துடிக்கும் சக்திகள், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, காஷ்மீர் தனி உரிமைகளை ஒட்டு மொத்தமாகப் பறித்து விடத் துடிக்கின்றன. இதில் காஷ்மீர் மக்கள் எச்சரிக்கையுடன் இருப்பார்கள் என்றே நம்புகிறோம்.

பெண்கள் உரிமை காக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் காஷ்மீர் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு உரிமைகளும் காப்பாற்றப்பட வேண்டும்!

~ இராசேந்திரன்

# கல்வி நிறுவனங்களில் மதச் சின்னங்களுக்குத் தடை!

இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் தலைமையமைச்சரும், 17 ஆண்டு காலம் அப்பொறுப்பில் இருந்தவருமான ஜவகர் லால் நேரு அவர்களிடம் ஒரு முறை, 'உங்கள் முன் உள்ள மிகப் பெரிய சவால் எது ?' என்ற வினா எழுப்பப்பட்டது. அதற்கு நேரு, 'மத உணர்வுள்ள ஒரு நாட்டில் மதச் சார்பற்ற அரசை நிறுவுவதே' என்றார். அதன் பிறகும் மிக நீண்டகாலம் 'மதச்சார்பற்ற அரசு' என்பது, சட்ட அங்கீகாரம் இன்றி வெறும் வாய்மொழியாகவே இருந்தது.

1976 இல் தான் நெருக்கடி நிலைக் காலத்தில் இந்திராகாந்தி அவர்கள் 42 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் 'மதச்சார்பின்மை' (Secular) என்ற சொல்லை இந்தியத் துணைக் கண்ட அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்தார்.

அரசியல் சட்டத்தில் 'மதச்சார்பின்மை' என்ற சொல்லை அறிமுகப்படுத்தும் முன்னரும் சரி, அதன் பின்னரும் சரி, இத்துணைக் கண்டத்தை ஆளும் வாய்ப்பு பெற்ற மய்ய அரசுகள் அச்சொல்லை வாய் கிழிய உச்சரித்தாலும் - அரசுகளின் செயல் பாடுகள் என்னவோ பார்ப்பனிய மதம் சார் புடையதாகவே இயங்கி வருகின்றன. 'ஒளி யின் வேலை இருட்டடிப்பு செய்வது தான்( ?)' - என்ற முரண்பட்டதோர் இலக் கணத்தைப் படைக்க பார்ப்பனிய சக்திகள் பெருமுயற்சி செய்கின்றன. இதற்கு அண்மைக் கால எடுத்துக்காட்டு ஒன்றும் உண்டு.

இந்தியத் துணைக் கண்டத்தின் நான்கு முனைகளையும் சாலைவழியாக இணைக் கும் மய்ய அரசின் திட்டமொன்று 'தங்க நாற்கரத் திட்டம்' (Golden quadrilateral) என்ற பெயரில் பல மாதங்களுக்கு முன்பு ஜம்மு-காஷ்மீரில் பூமி பூஜை போடப்பட்டு தொடங்கப்பட்டது. அதன் சாலை அமைக்கும் பணி ஏறத்தாழ 20% தற்போது முடிந்து விட்டது.

இந்நிலையில், சில நாட்கள் முன்பு அதே திட்டத்திற்கு கன்னியாகுமரியில் மீண்டு மொரு முறை பூமி பூஜை போடப்பட்டது. அதில், தலைமையமைச்சர் வாஜ்பேயியும், தமிழ் நாட்டின் முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் கலந்து கொண்டனர். பார்ப்பன மதவாதி களின்படி, பூமி பூஜை என்பது மண்ணைத் தோண்டுவதற்கு முன் செய்யப்படும் (காரண, காரிய, நியாயமற்ற) சடங்கு ஆகும். பார்ப்பனிய சடங்குகளை அரசு நிகழ்ச்சி களில் அரங்கேற்றுவதே மதச்சார் பின்மைக்கு எதிரானது; ஒரே நிகழ்ச்சிக்கு 2 முறை 'பூமி பூஜை' நடத்துகிறோமே என்ற குற்ற உணர்வுகூட வாஜ்பாய்க்கும் இல்லை, ஜெயலலிதாவுக்கும் இல்லை. அரசு பொதுத் துறை நிறுவனமான தொலைபேசியில் ஓடிப்போய் திரும்பி வந்த ஜெயேந்திர சரசுவதியின் 'சமஸ்கிருத'க் குரலைப் பிரச்சாரம் செய்வது அண்மையில் நடந்த மற்றொரு உதாரணம்.

மேற்சொன்ன 'பம்மாத்து' வேலைகள் எதுவும் இல்லாமல் 'மதச்சார்பின்மை' என்ற சொல்லை மிகச் சரியான பொருளில் புரிந்து நடக்கும் நாடு பிரான்ஸ். அந்நாட்டின் மதச்சார்பின்மைக்கு மிக நீண்ட காலப் பின்னணி உண்டு. அந்நாட்டை ஆட்சி செய்த லூயிஸ் பெரி என்பவர், அன்றைய பிரான்சில் மதமும் - அரசும் பின்னிப் பிணைந்து பூத்துக் குலுங்க வேண்டிய புதிய சமுதாயத்தைப் பொட்டலாக்கிய அவலத்தைக் கண்டார். அதைச் சீராக்க முயன்றார் லூயிஸ் பெரி. உடனே 'ஒட்டடை அடிப்பதால் வீடு பாழாகி விடும்' என மதவாதிகள் வழக்கம் போல் அலறினர். லூயிஸ் பெரி அதைத் துச்சமென தூக்கி யெறிந்தார். 1789-ல் 'மனித உரிமைகள் பிரகடனத்தை' (Declaration of Rights of Man) சட்டமாகக் கொணர்ந்து அரசியலிலிருந்து மதத்தைப் பிரித்த மகத்தான சாதனையைப் புரிந்தார். அதற்கு முன்பு வரை மத பீடத்திற்கு அடிமையாகி உயர்குலத்தோர் என்று கருதப்பட்டவரின் வசமாக இருந்த கல்வி, இச் சட்டத்திற்கு பிறகே ஏழை, எளிய மக்களுக்குக் கிடைத்தது.

### புரட்சிக் கவியின் பாடல்

அந்த லூயிஸ் பெரியின் 200 ஆவது பிறந்த ஆண்டு விழா பிரான்சின் காலனி யாக ஒரு காலத்தில் இருந்த புதுச்சேரியில் கொண்டாடப்பட்டது. அவ் விழாவிற்கு பிரான்சின் அரசுத் தலைவர் புதுவை வந்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் அவ் விழாவில் கலந்து கொண்டு ஓர் கவிதை வடித்தார்.

'வறியவர்க்கெல்லாம் கல்வியின் வாடை
வரவிடவில்லை மதகுருக்களின் மேடை
நறுக்கத் தொலைந்தது அந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை'

மேற்சொன்ன கவிதை வரிகள், லூயிஸ் பெரி அவர்களின் சமூகப் பணியைப் புகழ்ந்து பாரதிதாசன் அவர்கள் அவ்விழாவில் வடித்தக் கவிதையின் சில வரிகள். பிரான்ஸ் நாட்டின் 'மதச்சார்பின்மை' பற்றிய இப் பின்னணித் தகவலுடன் அந்நாட்டை அண்மையில் உலுக்கிக் கொண்டிருக்கும் செய்தி ஒன்றை அலசுவோம்.

> **'சிறிய அளவிலான சிலுவை' அணிய அனுமதி என்பது ஒரு மதத்திற்கு மட்டுமான சிறப்புச் சலுகை என்றாகி விடும்.**

முன்னர் சொன்ன 1789 ஆம் ஆண்டு சட்டப்படி, பிரான்சில் எல்லா மதங்களும் சமமாகக் கருதப்படுகிறது; மதச் சுதந்திரமும் பாதுகாக்கப்படுகிறது. எனினும் அரசின் கல்விக் கூடங்களுக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் மதச்சின்னம் அணிந்து வருவது தடை செய்யப்பட்டிருக்கிறது. (தனியார் கல்விக் கூடங்களுக்கு இது பொருந்தாது) ஆனால், அண்மைக் காலங்களில் முஸ்லிம், கிறித்தவ, யூத, சீக்கிய - மாணவர்கள் தங்களின் மத அடையாளங்களுடன் அரசுப் பள்ளிகளுக்கு வருவது அதிகரித்திருக்கிறது. 'எங்கள் மதச் சின்னத்தை நாங்கள் எங்கும் அணிந்து செல்ல எங்களுக்கு உரிமை உண்டு' என்று கூறி அச்செயலை மாணவர்கள் நியாயப் படுத்துகிறார்கள். 'தங்கள் வீடு என்பதற்காக போகும் இடமெல்லாம் வீட்டையும் சுமந்து செல்வோம்' என்று கூறும் அறிவிலித் தனத்திற்கு ஒப்பான செயல் அது என்பதை பாவம் அவர்கள் அறியவில்லை.

ஏற்கனவே 1989 இல் அரசுப் பள்ளிக்கு மத அடையாளத்தோடு வந்த மூன்று (முஸ்லிம்) மாணவிகள் நீக்கப்பட்டனர். இதன் பிறகு மதவாதசக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து, 'மதச்சார்பின்மை' கோட் பாட்டை முறியடிக்கும் நோக்கில் திட்டமிட்டு, தற்போதைய எல்லை மீறும் நிலை வரை சென்றிருக்கின்றனர்.

பிரான்ஸ் அரசு இதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. அரசின் கல்விக் கூடங்களுக்கு மத அடையாளத்துடன் மாணவர்கள் வருவதைத் தடுக்கும் சட்டம் ஒன்றை பிரான்ஸ் அரசு கொணர முடிவு செய்தது. இதைப் பற்றிய தகவலும் வெளிவந்தது. உடனே, வேங்கை சைவத்தின் மேன்மையைப் பற்றி அக்கறைப்படுவதைப் போல, போப்பாண்டவர் 'மதச்சார் பின்மையை'ப் பற்றி பிரான்ஸ் அரசுக்கு போதிக்கத் தொடங்கிவிட்டார். முஸ்லிம் அமைப்புகள் ஊர்வலம் நடத்தின. சீக்கிய அமைப்புகளோ - ஹாலந்து, ஜெர்மனி, பிரிட்டன், பெல்ஜியம், கனடா ஆகிய நாடுகளிலிருந்து தங்கள் மதத்தவரை வரவழைத்து ஊர்வலம் விட்டனர். பிரான்ஸ் கல்வி அமைச்சர் லூஃபெர்ரி (Luc Ferry) அவர்கள், 'தலையில் அணியும் டர்பனுக்கு பதில் ஊடுருவி பார்க்கும் மெல்லிய வலையை (Transparent Net) அணிந்து கொள்ளுங்கள்' என சீக்கியர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். அவர்களால் அவ்வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டது.

நிலைமை எல்லை மீறுவதை உணர்ந்த பிரான்ஸ் அரசு காலங்காலமாக பேணப் பட்டு வருகிற 'மதச்சார்பின்மையைக்' காக்க தோள் தட்டிப் புறப்பட முடிவு செய்தது. 'மதச்சின்னங்களை அரசுப் பள்ளிகளில் அணியத் தடை செய்யும் வரைவுத் திட்டத்தை' பிரான்ஸ் அமைச்சரவை ஜன.28, 2004 இல் அங்கீகரித்தது. நாடாளுமன்றத்தில் பிப்ரவரி 3 அன்று விவாதத்திற்கு வைத்தது. பிப்ரவரி 10, 2004 இல் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தது. தடை செய்யப்பட வேண்டும் என்ற வரைவுக்கு ஆதரவாக 458 வாக்குகளும், எதிராக வெறும் 36 வாக்கு களும் கிடைத்தன. அதாவது, 93% ஆதரவு வாக்குகளுடன் சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டது. பொது மக்களிடம் நடத்தப்பட்ட கருத்து கணிப்பில் 70 சதவீத மக்களும், பள்ளி ஆசிரியர்கள் ஏறத்தாழ முழுமையாகவும் இச்சட்டத்தை ஆதரித்தனர்.

பிரான்சில் இச்சட்டம் அவர்களின் கல்வி யாண்டு தொடங்கும் காலமான செப்டம்பர் 2004 முதல் அமுல்படுத்தப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தி பிரான்ஸ் அரசால் உலகம் முழுவதற்கும் அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்த நிகழ்வில் இரு செய்திகள் விழியில் விழுந்த துரும்பென மிகவும் நெருடலாக இருக்கின்றன. ஒன்று, அந்த 'சட்ட வரைவை' எதிர்த்து விழுந்த வாக்கு களில் கம்யூனிஸ்ட் கட்சியின் வாக்குகளும் அடக்கம் என்பது. வரலாற்றுப் பிழை என்ற சொற்களுக்குள் வகையாக தாங்களாகவே அந்நாட்டு கம்யூனிஸ்டுகள் மாட்டிக் கொண்டு விட்டனர்.

இரண்டாவது, அந்த சட்ட வரைவில் 'பெரிய அளவிலான சிலுவை' தடை செய்யப்படுகிறது என்ற சொற்றொடர் இடம் பெற்றிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அப்படியெனில், 'சிறிய அளவிலான சிலுவை' அணிய அனுமதி என்பது ஒரு மதத்திற்கு மட்டுமான சிறப்புச் சலுகை என்றாகி விடும்.

இவ்வளவு மிக நீண்ட 'மதச்சார்பின்மை' வரலாறு கொண்ட பிரான்ஸ் நாட்டின் பாரம்பரியத்திற்கு மேலே சொன்ன சொற்றொடர் இழுக்கு ஏற்படுத்துவதாகவே உள்ளது. எனவே, அந்த இழுக்கையும் கலைந்து ஒட்டு மொத்த மதச்சின்னங்களும் அணிய தடை செய்யப்பட்டுவிட்டன என்ற அறிவிப்பைக் கேட்டு மகிழ அறிவு உலகம் மிகவும் ஆவலாக இருக்கிறது.

**-கி.சா. ஜஸ்டின் ராஜ்**

### 'அம்பேத்கர் தொண்டர் படை மாநாடு' தீர்மானம்

## சங்கராச்சாரி சூழ்ச்சிக்கு பலியாகும் 'தலித்' தலைவர்கள்

'புரட்சியாளர் அம்பேத்கர் தொண்டர் படை'யின் 5வது மாநில மாநாடு 28.2.2004 அன்று மாலை புதுச்சேரி சிங்காரவேலர் சிலை அருகில் பெரியார் திடலில் எழுச்சியுடன் நடைபெற்றது. மாநில அமைப்பாளர் கி. மூர்த்தி தலைமை தாங்கினார். மக்கள் கண்காணிப்பக இயக்குநர் ஹென்றிடிபேன், பேராசிரியர் கல்வி மணி, கே. சுகுமாரன், புதுவை தி.க. தலைவர் லோகு. அய்யப்பன், மங்கையர் செல்வன் உட்பட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் உரையாற்றினர். பெ. அழகிரி தலைமையில் நடந்த பொது அரங்கில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பூ.சந்திரபோஸ் (தியாகி இமானுவேல் பேரவை), அய்தர் அலி (த.மு.மு.க.) ஆகியோர் உரையாற்றினர். டாக்டர் கே.ஏ. குணசேகரன் குழுவினரின் கலை நிகழ்ச்சி சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில் தலித் மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கு, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் ஆதரவு உறுதியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

மாநாட்டில் தலித் மக்களை இழிவுபடுத்திப் பேசும், காஞ்சி சங்கராச்சாரியைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்ற பெயரில் சங்கராச்சாரியின் சூழ்ச்சிக்கு தலித் தலைவர்கள் பலியாவதை மாநாடு வருத்தத்துடன் சுட்டிக் காட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தியும் 'பொடா' சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 11th March 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் 18, 2004 | புரட்சி 3 | முழக்கம் 10 | விலை : ரூ.2.50

# டெல்லியில் நடந்த பொது விசாரணை: 12 மாநிலங்களிலிருந்து 55 பேர் கண்ணீர் சாட்சியம்










# பொடா அடக்குமுறை கொடூரங்கள் அம்பலம்

"பொடா பயங்கரவாதத் தடுப்பு சட்டமல்ல; பயங்கரவாதிகளைத் தயாரிக்கும் சட்டம். பொடா சட்டத்தைக் கச்சாப் பொருளாக்கி, காவல் துறையினர் பயங்கரவாதிகளைத் தயார் செய்த வழிமுறைகளை இப்போது நாங்கள் விளக்கப் போகிறோம்" - குஜராத் மாநிலத்தைச் சார்ந்த - மக்கள் உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வரும் ஒரு வழக்கறிஞர் இவ்வாறு குறிப்பிட்டார்; அவர் பெயர் முகுல்கிந்தா; பேசிய இடம் பொடா சட்டம் பற்றிய மக்கள் விசாரணை மன்றம்! மார்ச் 13, 14 தேதிகளில், டில்லி இந்திய சமூக நிறுவனத்தின் மய்ய அரங்கத்தில் வெளிவந்த தகவல்கள், பாதிக்கப்பட்டவர்களின் துயரக் கதைகள் - இதயத்தை இறுக்கமாக்கின.

தமிழ்நாடு, ஜார்க்கண்ட், பஞ்சாப், ஆந்திரா, குஜராத், மகாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர், உத்திரப்பிரதேசம், பீகார், மணிப்பூர் மாநிலங்களிலிருந்து, 'பொடா'வின் அடக்குமுறைக்கு உள்ளான 55 பேர், நடுவர்கள் முன் தோன்றி, சந்தித்த சித்திரவதைகள், இழப்புகள், மன அழுத்தங்கள், பொருள் இழப்புகள், துயரங்களை வெளிப்படுத்தினர்.

முன்னாள் சட்ட அமைச்சர் ராம்ஜெத்மாலனி, பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எச்.சுரேஷ், கல்கத்தா உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி டி.கே.பாசு, தேசிய பெண்கள் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மோகினி கிரி, முன்னாள் உறுப்பினர் சபீதா அமீது, மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தலைவர், மூத்த வழக்கறிஞர் கண்ணபிரான், எழுத்தாளர் அருந்ததிராய், பத்திரிகையாளர் பிரபுல் பித்வாய் ஆகியோர் நடுவர்களாக இருந்து பாதிக்கப்பட்ட மக்களின் வாக்கு மூலங்களைக் கேட்டனர்.

பொடாவில் கைது செய்யப்பட்ட பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், அழகு சுந்தரம் (ம.தி.மு.க.) சிறுவர்கள் பிரபாகரன், பகத்சிங் ஆகியோரும், மூத்த வழக்கறிஞர் சந்துரு, வழக்கறிஞர் தேவதாஸ் ஆகியோரும் நடுவர்கள் முன் அத்துமீறல்களைப் பதிவு செய்தனர். முதலில் பேச வந்த பழ.நெடுமாறன் இரண்டே வார்த்தைகளில் நடுவர்களை அதிர்ச்சி அடையச் செய்து விட்டார். "நடுவர் அவர்களே! பார்வையாளர்களே! நாங்கள் எந்த வாக்குமூலத்தையும் இங்கே தர முடியாது. அதற்கு எங்களுக்கு உயர்நீதி மன்றம் அனுமதிக்கவில்லை; அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்." அடுத்து வந்த பேரா. சுப. வீரபாண்டியனும் இதையே சொன்னார்.

அதிர்ச்சி அடைந்த முன்னாள் சட்ட அமைச்சர் ராம் ஜெத்மாலனி கேட்டார்: "எந்தச் சூழ்நிலையிலும் கருத்துரிமையைக் காப்பாற்ற வேண்டிய கடமை உயர்நீதிமன்றங்களுக்கு உண்டு; இது பொதுக் கூட்டமல்ல; நீங்கள் பேச விரும்பினால் பேசலாம். பிரச்சினை வந்தால், நான் நீதிமன்றத்தில் உங்களுக்காக உதவுகிறேன்" என்றார். மூத்த வழக்கறிஞர் சந்துரு, நீதிமன்றத்தின் நிபந்தனைகளை நடுவர்களிடம் எடுத்துக் கூறினார்.

"தேர்தல் கூட்டங்களில் - தேர்தல் தொடர்பாக மட்டுமே அவர்கள் பேசலாம்; மற்றபடி, எந்த நிகழ்ச்சியிலும் பேசக் கூடாது; இந்த சலுகைகூட தேர்தல் வரை தான்" என்று நீதிமன்றம் வழங்கியிருக்கும் நிபந்தனையைச் சுட்டிக் காட்டிவிட்டு -

தமிழ்நாட்டில் 'பொடா' முறைகேடாகப் பயன்படுத்தப்பட்ட விவரங்களை ரத்தினச் சுருக்கமாக பட்டியலிட்டார் சந்துரு. "தேசிய ஜனநாயக முன்னணியை உடைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே ஜெயலலிதா, 'பொடா'வைப் பயன்படுத் தினார்; அதனால் தான் பொடா வை.கோ. மீது முதலில் பாய்ந்தது. பிறகு, வை.கோ. கைதை நியாயப்படுத்துவதற்காக, நாங்கள் வேறுபாடு எதையும் காட்டவில்லை என்ப தற்காக - பழ.நெடுமாறனையும் அவரது ஆதரவாளர்களையும் பொடாவில் கைது செய்தனர்.

சென்னை ஆனந்த் திரையரங்கத்திலே பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், தாயப்பன் ஆகியோர் பேசிய பேச்சுக்காக, அவர்கள் 'பொடா'வில் கைது செய்யப்பட்டனர். அங்கே நடந்தது காவல்துறை அனுமதி பெற்று நடந்த ஒரு விமர்சனக் கூட்டம். சர்வதேச பத்திரிகையாளர்கள் முன் - விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், சமரசப் பேச்சு வார்த்தைக்கு ஆதரவு தெரிவித்து, அளித்த பேட்டி பற்றிய விமர்சனக் கூட்டம். இந்தக் கூட்டத்தைப் பற்றி, பிறகு முதலமைச்சர் ஜெயலலிதாவிடமே, தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்கள் கேட்டனர்.

'ஆனந்த் திரையரங்கத்திலே நடந்தக் கூட்டத்தில் சட்ட விரோதமாக எதுவும் பேசப்படவில்லை என்று, காவல்துறையிடமிருந்து தகவல் கிடைத்துள்ளது' என்று ஜெயலலிதாவே கூறினார். அந்தக் கூட்டத்தில் பல் மருத்துவர் டாக்டர் தாயப்பன், கூட்டத்தில் பேசியவர்களை, அறிமுகப்படுத்தினார். விடுதலைப்புலிகள் பற்றி எதையுமே பேசவில்லை; சாகுல் அமீது, அந்தக கூட்டத்துக்கே வரவில்லை. கூட்டத்துக்கு நிதி அளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

## "மன்னிப்பு கோருகிறேன்"




வாஜ்பாய் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த முன்னாள் சட்ட அமைச்சர் ராம்ஜெத்மாலனி விசாரணை மன்றத்தில் நடுவராக இருந்து பேசும் போது இவ்வாறு கூறினார்.

"பொடா சட்டம் கொண்டு வரப்பட்டதற்கு நான் முக்கிய காரணமாக இருந்தேன்; காங்கிரஸ் கட்சி கொண்டு வந்த தடா சட்டத்தை நான் எதிர்த்தவன். செப். 11ல் அமெரிக்காவில் நடந்த தாக்குதலைத் தொடர்ந்து, அய்.நா. பாதுகாப்புக் கவுன்சில், வேண்டுகோளை ஏற்று, இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டம் இவ்வளவு மோசமாகப் பயன்படுத்தப்பட்டதை - இந்த விசாரணையில் தான் உணர்ந்தேன். இந்தச் சட்டதைக் கொண்டு வரக் காரணமாக இருந்தவன் என்கிற முறையில், நான் வருந்துகிறேன். மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே தரப்பட்ட வாக்கு மூலங்களும், நடுவர்களின் பரிந்துரைகளும் விரைவில் ஆவணமாகத் தொகுக்கப்பட வேண்டும். அந்த ஆவணம் தேர்தல் களத்தில் மக்களிடையே கொண்டு செல்லப்பட்டு, பொடாவுக்கு எதிரான பிரச்சார இயக்கத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். மிகச் சிறப்பான பொது விசாரணை இது. இதில் பங்கேற்க வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். பொடா சட்டம் முழுமையாக துடைத்து எறியப்பட்டு, சட்டப் புத்தகத்திலிருந்து தூக்கி வீசப்பட வேண்டும்" என்று பலத்த கரவொலிகளுக்கிடையே அறிவித்தார் ராம்ஜெத்மாலனி.

அடுத்துக் கருத்து தெரிவித்த நடுவர்கள் பலரும், மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் பேசினார். சிலர் கண்களில் நீர் பனித்தது. நடுவர்களின் பரிந்துரைகள் மிகச் சிறப்பான ஆவணமாக வெளிவரும் என்று அனைவரும் உறுதி அளித்தனர். 'பொடா'வுக்கு எதிரான நாடு தழுவிய வலிமையான இயக்கம் துவங்கப் போகிறது! இந்த இயக்கம் - தேர்தல் களத்தில் சூறாவளியாக மாறும் என்ற நம்பிக்கையோடு விசாரணை நிறைவடைந்தது.

## மாநில கலந்துரையாடல் கூட்டம்

தந்தை பெரியார் திராவிடர் கழக மாநில அளவிலான கலந்துரையாடல் கூட்டம் 28.3.2004 அன்று ஈரோடு நகரில் நடக்க இருக்கிறது.

இடம் : தமயந்தி பாபு சேட் நகராட்சி திருமணக் கூடம் (பேருந்து நிலையம் பின்புறம்)

காலை 10 மணி

கழகப் பொறுப்பாளர்கள் - தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கொளத்தூர் மணி (தலைவர்)
கோவை இராமகிருட்டினன்,
விடுதலை ராசேந்திரன்
(பொதுச்செயலாளர்கள்)

# யார் அன்னியர்?

அன்னியர் சோனியா காந்தி - இந்தியாவின் பிரதமர் ஆகலாமா ? - இதுதான் இப்போது, பார்ப்பன இந்துத்துவா சக்திகளும், பார்ப்பன ஜெயலலிதாவும் எழுப்பும் கேள்வி !

வாஜ்பாய் ஆட்சிக்கு தந்த ஆதரவை விலக்கிக் கொண்டு, டெல்லி நட்சத்திர ஓட்டலில் முகாமடித்து, சோனியாவுடன் தேநீர் விருந்தில் பங்கேற்று, சோனியாவை பிரதமராக்க, டெல்லியில், நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் சந்தித்துப் பேசினாரே, ஜெயலலிதா; அப்போது, சோனியா, அன்னியர் என்பது அவருக்குத் தெரியாமல் போய்விட்டதா ?

வேறு ஒரு நாட்டிலே பிறந்தவர் என்ற காரணத்துக்காக ஒருவர் அன்னியராகிட மாட்டார்; மக்களை நேசிக்கத் தெரிந்தவர்கள் - மக்களை அன்னியப்படுத்த விரும்பாதவர்கள் அன்னியர்களாகிட மாட்டார்கள் ! ஆனால், இந்த நாட்டில் பிறந்து, இந்த நாட்டு மக்களின் உழைப்பைச் சுரண்டி, சொந்த நாட்டு மக்களையே சாதியாலும், தீண்டாமையாலும் அன்னியப் படுத்தி வைத்துள்ளார்களே ? அவர்கள் தான் உண்மையான அன்னியர்கள் !

■ கோயில் கருவறைக்குள் - தமிழையும் -தமிழனையும் நுழைய விடாமல், தடுக்கும் சங்கராச்சாரிகள் யார் ? அன்னியர்கள் அல்லவா ?

■ தகுதியும், திறமையும், தங்களுக்கு மட்டுமே உண்டு என்று பறைசாற்றிக் கொண்டு, பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களை தகுதியற்றவர்கள் என்று கூறிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் யார் ? அன்னியர்கள் அல்லவா ?

■ முதுகில் தங்களுக்கு மட்டும் காயத்ரி மந்திரம் ஓதி, பூணூல் போட்டு, "பிராமணனாக" உயர்த்திக் கொண்டு, ஏனைய மக்களை 'சூத்திரர்கள்' என்று அன்னியப்படுத்துகிறார்களே ? அவர்கள் தானே உண்மையான அன்னியர்கள் ?

■ உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களை அன்னியப்படுத்தும், பார்ப்பன சங்கராச்சாரிகளை தனது வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கும் ஜெயலலிதாக்கள் - 'அன்னியர்கள்' என்ற வாதத்தை முன் வைக்கலாமா ?

■ தான் நடத்தும் யாகங்களிலும், சடங்குகளிலும், சமுதாயத்தையே அன்னிய மயமாக்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனப் புரோகிதர் கூட்டத்தை அழைத்து, அவர்களை "புனிதாத்மாக்களாக" அங்கீகரிக்கும் ஜெயலலிதா - அன்னியர் பிரச்சினை பற்றிப் பேசுவதா ?

■ உலக வங்கிக்காரன் என்ன இந்தியனா ? அவனிடம் கோடிக் கணக்கில் கடன் வாங்கி, அவன் போடும் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு, சொந்த நாட்டு விவசாயிகள், சொந்த நாட்டு நெசவாளிகளை வயிற்றிலடிப்பவர்கள், 'அன்னியர்'கள் ஆட்சிக்கு வரக்கூடாது என்று அங்கலாய்க்கலாமா ?

■ இந்தியன் என்பதற்கு அடையாளமே - 'இந்து'வாக இருப்பது தான் என்று கூறிக் கொண்டு, ஏனைய மதத்தினரை எல்லாம், தேசத்தின் விரோதிகள் என்று, சொந்த நாட்டு மக்களை அன்னியப்படுத்தும் கூட்டம், 'அன்னியர்' வாதம் பேசலாமா ?

■ இதற்காகவே - மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து, இந்துத்துவா கும்பலின் பாராட்டைப் பெற்ற ஜெயலலிதாவா, அன்னியர் பற்றிப் பேசுவது ?

■ அமெரிக்காவிலும், அய்ரோப்பிய நாடுகளிலும் குடிபுகுந்து கொண்டு, டாலர்களைக் குவித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் - அந்த நாட்டின் குடிமக்களாகவே பதிவு செய்துகொண்டு, வாழ்கிறார்களே ? அவர்களை எல்லாம், அன்னியர் என்று, பா.ஜ.க.வும், ஜெயலலிதாவும் ஒதுக்கி வைப்பார்களா ?

■ அமெரிக்காவிலும், அய்ரோப்பாவிலும் 'குடி உரிமை' பெற்றுக் கொண்டு வாழும் "இந்தியர்"களுக்கு - இந்தியாவின் குடியுரிமையும் வழங்கப்படும் என்று, சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினாரே, வாஜ்பாய் ! இது என்ன 'பிராண்ட்' தேச பக்தி ? இங்கே 'அன்னியர்' பிரச்சினை காணாமல் போனது ஏன் ? இவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள் என்பதால் தானே ?

■ அப்படி இரட்டைக் குடி உரிமை வழங்குவதில்கூட, அரபு நாடுகளிலும், மலேசியாவிலும், வாழும் "இந்தியர்களை" ஒதுக்கி வைத்து, இவர்கள் பெரும்பாலும் "சூத்திரர்கள்" என்பதால் அவர்களுக்கு இந்த இரட்டை குடி உரிமை கிடையாது என்று அன்னியப்படுத்தியதே வாஜ்பாய் ஆட்சி ! மறந்துவிட்டதா ?

■ குஜராத்திலே பிறந்து வளர்ந்த ஆயிரக்கணக்கான மக்களை உயிருடன் நெருப்பில் போட்டுக் கொளுத்தி, கொடுவாளால் வெட்டி, நாட்டையே சுடுகாடாக்கியது யார் ? அந்த மனிதப் படுகொலையின் வெற்றித் திருவிழாவாக நடந்த மோடி பதவி ஏற்பு விழாவுக்கு, தனி விமானத்தில் போய், வாழ்த்தியது ஜெயலலிதா அல்லவா ? இவர்கள் எல்லாம் சொந்து நாட்டு மக்கள் என்றும், தேசபக்தி என்றும் கண்ணீர் வடிப்பதா ?

உலகின் ஏதோ ஒரு மூலையில் பிறந்து, இந்தியா வந்து, அநாதைகளுக்கும், நோயாளிகளுக்கும் மறு வாழ்வு இல்லங்களைத் திறந்து, இந்த மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட, அன்னை தெரசா அன்னியரா ? அல்லது இங்கேயே பிறந்து, இங்கேயே தீண்டாமையையும், மனுதர்மத்தையும் பரப்பிக் கொண்டு, இங்கேயே சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில், பெரும்பான்மை மக்களை அன்னியப்படுத்தி வரும் பார்ப்பனர்களும், சங்பரிவாரங்களும், சங்கராச்சாரிகளும், அவர்கள் வழியில் நடைபோடும் ஜெயலலிதாக்களும் அன்னியர்களா ?

**திட்டவட்டமாக சொல்கிறோம், எங்களை நேசிக்கும், எங்களை அரவணைக்கும், எங்கள் உரிமைகளை அங்கீகரிக்கும் அனைவருமே அவர்கள் எந்த நாட்டில் பிறந்தாலும், எங்கள் சொந்தங்கள் தான்.**

**இவைகளை மறுக்கும் எவரும் - அவர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்களாக இருந்தாலும், அன்னியர்களே!**

சோனியா, இத்தாலியில் பிறந்தவர் தான். இப்போது இந்தியாவின் குடிமகள்; இந்திய நாடாளுமன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர்; இந்தியாவின் பாரம்பரியமிக்க பெரிய கட்சி ஒன்றுக்குத் தலைவர் ! இந்தியாவின் தொகுதி ஒன்றிலிருந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.

சோனியா அன்னியர் என்றால், சட்டமன்றத்தில் நான் பாப்பாத்திதான் என்று இறுமாப்புடன் பிரகடனம் செய்த ஜெயலலிதா யார் ?

**பதில் சொல்வார்களா?**

**கண்ணாடி வீட்டுக்குள்ளிலிருந்து கல் எறியாதீர்கள்!**

---

தோழமை தலையங்கம்

## பகுத்தறியுங்கள்!

*மக்களை அடி முட்டாள்களாக்குவதில், அரசியல்வாதிகளுக்கும், மதவாதிகளுக்கும் ஈடு இணையே கிடையாது. இந்த நாட்டு மக்களை, தேர்தல் நேரத்தில் மட்டும் ஏதோ அதிசய பூமிக்கு கொண்டு செல்வதாக அரசியல்வாதிகளால் வாய் கூசாமல் பிரச்சாரம் செய்ய முடிகிறது. மக்கள் தண்ணீருக்காக அல்லலுறும் இந்த நேரத்தில், அவர்களை 'மகாமகம்' என்னும் மூத்திரக் குட்டையில் நிற்க வைக்க, மதவாதிகள் வழி வகுக்கின்றனர். இதற்காக, இந்த அரசு 50 கோடி ரூபாய்க்கும் மேல் – மக்களின் வரிப்பணத்தைச் செலவழிப்பது, வன்மையான கண்டனத்துக்குரியது.*

*அரசுப் பணியாளர்களைப் பழி வாங்கிய முதல்வர் ஜெயலலிதா, தேர்தலில் மக்கள் அவரைப் பழிவாங்கிவிடக் கூடாது என்பதற்காக, அவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொண்டுள்ளார். இதற்கென்று விசாரணைக் கமிஷன்கள் அமைத்து, இப்பணியாளர்களை சிறையில் அடைத்து, துன்புறுத்தி, அரசுப் பணத்தை வீணாக்கி, தேர்தல் நேரத்தில் அவர்களை சேர்த்துக் கொள்ள முடிகிறது என்றால், இதுவரை செய்தவை எல்லாம் பொறுப்பற்ற செயல்கள் தானே! மக்கள் போராடும் போதெல்லாம் இலவச மின்சாரத்திற்கு, விலைவாசிக் குறைப்புக்கு இன்னும் பல நியாயமான கோரிக்கைகளுக்கு எல்லாம் செவி சாய்க்காத அரசு, தேர்தல் நேரத்தில் மட்டும் அவற்றை நிறைவேற்றவும், வரியில்லாத பட்ஜெட்டை அளிக்கவும் முடிகிறது என்றால், இது அசல் ஜனநாயகக் கேலிக் கூத்தல்லாமல் வேறென்ன?*

*ஆடு, கோழிகளைப் பலியிடுவதைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஜெயலலிதா, மக்களின் வழிபாட்டு முறையில் தலையிடுவதால், தேர்தலில் ஆண்டவன் நம்மைத் தண்டித்து விடுவானோ என்று எண்ணி அச்சட்டத்தை திரும்பப் பெற்றுவிட்டார். ஆனால், தேர்தல் நாடகத்திற்காகக்கூட, மதமாற்றத் தடைச் சட்டத்தை அவர் திரும்பப் பெறத் தயாராக இல்லை. ஜெயலலிதா அரசு இத்தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம், இது இந்துத்துவ செயல் திட்டத்தின் ஒரு பகுதிதான் என்று சொல்லி சட்டத்தை எதிர்த்தவர்கள், மறுபுறம் உழைக்கும் மக்களின் பண்பாடு – வழிபாட்டு முறை என்ற பெயரில் அந்த மூடத்தனத்தை ஆதரிக்கவே செய்தனர்.*

*உழைக்கும் மக்கள் மூடநம்பிக்கைகளில் உழன்று கிடப்பதை, அதுவும் அத்தகைய மூட நம்பிக்கைகளின் பேராலேயே அவர்கள் காலங்காலமாக அடிமைப்படுத்தப்பட்டு வருவதையும் நாம் எப்படி மாற்றப் போகிறோம்? ஆடு, கோழி பலியிடுவதைத் தடை செய்தபோது, கிடாவெட்டி அத்து மீறியவர்கள், மதமாற்றத் தடைச்சட்டத்தின்போது அதை மீறும் வகையில் மதம் மாறவில்லை. அல்லது மக்களை அதற்குத் தயார் செய்யவுமில்லை. ஏனெனில், மதம் அவர்களுக்கு மூட நம்பிக்கை. ஆனால், கோயிலில் கிடா வெட்டுவது மட்டும் பகுத்தறிவாகிப் போனது எப்படி?*

*குறிப்பாக, சாதி அமைப்பை எதிர்த்துப்போரிடும் தலித் இயக்கங்கள், மூடநம்பிக்கை ஒழிப்பு என்ற பிரச்சினையில் – எத்தகைய அளவுகோலை முன்னிறுத்துகிறது என்பது மிகவும் முக்கியம். உலகெங்கும் புத்தர் கடவுளாக வழிபடுவதை மறுத்து – அவரை மனிதராகக் காட்டுவதற்கும், பவுத்த நெறியைப் பரப்புவதற்குமே அண்ணல் அம்பேத்கர் இறுதிவரை போராடினார். அதே போல, பகுத்தறிவுக்கு எதிரான அனைத்து வகை மூட நம்பிக்கைகளையும் பெரியார் கடுமையாகச் சாடினார்; பார்ப்பன மகாமகத்தில் இருந்து, பாமர மக்களின் தீ மிதி; அலகு குத்துவது, மொட்டை அடிப்பது, காவடி எடுப்பது, சாமியாடுவது என அனைத்தையும் பொய் என்று நிரூபித்து, மக்களைப் பகுத்தறிவாளர்களாக – முழு மனிதர்களாக்க எண்ணினார்.*

*ஆனால் நாம், இது தலித்துகள் மற்றும் உழைக்கும் மக்களின் வழிபாட்டு முறை என்ற பெயரில், மூட நம்பிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கப் போகிறோமா? ஆயிரக்கணக்கான எருமை மாடுகளை, பலியிடுதல் என்ற பேரால் வெட்டிக் கொல்வதையும், சங்கராச்சாரிகளின் யாகங்களையும் பிரித்துப்பார்த்து – ஒன்று பகுத்தறிவு, மற்றொன்று மூடநம்பிக்கை என்று இரண்டு அளவு கோல்களை வைக்கப் போகிறோமா? தலித்துகள் மீதான வன்கொடுமைகளைக் கண்டிக்கும் தலித் இயக்கங்கள், மகாமகக் கேடுகளை, யாகங்களை, அதற்கு முழு காரணமான சங்கராச்சாரிகளைக் கண்டிக்க முன் வராததற்கு என்ன காரணம்? இது குறித்து விவாதங்கள் தேவை.*

*கடவுள் மறுப்பும் மூட நம்பிக்கை ஒழிப்புமே அடிப்படைப் பணிகள். சாதி ஒழிப்பை அதிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. கடவுளும் மதமும் சடங்குகளுமே சாதி அமைப்பின் அஸ்தி வாரம். அதன் மூலம் எழுந்த சிந்தனைதானே சாதி. ஆக, விளைவுகளை மட்டுமே கண்டித்து, வேர்களை விட்டு விடுவது எப்படி சரியாகும்? மக்களின் நம்பிக்கைகளுக்கு மதிப்பளிப்போம் என்று சொல்ல ஆரம்பித்தால், இறுதியில் சாதியையும் ஆதரிக்கும் ஆபத்தில்தான் அது முடியும். எச்சரிக்கை!*

'தலித் முரசு' தலையங்கம் (மார்ச், 2004)

# பொடா அத்துமீறல்கள் ஆவணமாக வெளிவருகிறது!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இவர்கள் அனைவருமே ஒரு மாதத்துக்குப் பிறகு 'பொடா'வில் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து, தமிழ்நாட்டில் செயல்படும் காவல்துறையின் 'கியு பிராஞ்ச்' பற்றி சந்துரு குறிப்பிடுகையில், ''அரசியல் கட்சிகளைக் கண்காணிப்பதற்காகவே காவல்துறையில் ஒரு அரசியல் பிரிவை வைத்திருக்கிறார்கள். அதை 'கியு பிராஞ்ச்' என்கிறார்கள். கொசினபல் பிராஞ்ச் (Questionable Branch) என்றுதான் நான் கூறுவேன். இது ஒரு அரசியல் போலீசு!''

இந்தத் துறைக்கு தனி அய்.ஜி. இருக்கிறார்; இது முதலமைச்சரோடு மட்டும் நேரடியாகத் தொடர்புள்ள துறை. இவர்கள் செலவிடும் தொகைக்கு அரசுத் தணிக்கை கிடையாது. இந்த 'கியு பிராஞ்ச்' தான் - பொடா கைதுகளையும் கவனிக்கிறது. 'பொடா' வழக்கில் உயர்நீதிமன்றத்தில் கிடைத்த ஒவ்வொரு பிணை மனுவையும் எதிர்த்து மேல் முறையீடு செய்துக் கொண்டிருக்கிறது.''

பொடாவில் கைது செய்யப்பட்ட பாவாணன் - ஒரு இலக்கியவாதி; அவர் பொதுக்கூட்டத்தில், விடுதலைப்புலிகள் பற்றிப் பேசவே இல்லை; ஜெயலலிதாவைத் தான் விமர்சித்துப் பேசினார்; அதற்காக 'பொடா'வின் தேசத் துரோகப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார். ஜெயலலிதாவை எதிர்த்தாலே - தேசத்தை எதிர்ப்பதுதான் என்று முடிவு செய்து, 'பொடா'வில் தேசத் துரோகப் பிரிவின் கீழ் வழக்குப் போட்டிருக்கிறார்கள்'' என்றார் சந்துரு.

தொடர்ந்து, பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் 'பொடா'வில் கைது செய்யப்பட்ட பின்னணியை அவர் விளக்கினார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது, துப்பாக்கியா ? நாட்டுத் துப்பாக்கியா ? ரிவால்வாரா என்பது பற்றி காவல்துறைக்கே சந்தேகம். வெவ்வேறு தகவல்களை முரண்பாடாகக் கொடுத்தார்கள். கலவரப்பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதியில் ஒருவரிடமிருந்து ஆயுதத்தைப் பறி முதல் செய்தால் அவரைப் பொடாவின் கீழ் கைது செய்யலாம் என்பதால், தமிழ்நாடு முழுதையுமே கலவரப்பகுதியாக அறிவித்து, அடுத்த நாளே 'பொடா'வில் நக்கீரன் கோபாலைக் கைது செய்தார்கள் என்றார் சந்துரு. உடனே நடுவர் மோகினிகிரி கேட்டார், ''தமிழ்நாடே கலவரப்பகுதி என்று ஜெயலலிதா அறிவித்து விட்டு, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று கூறுகிறாரே, அது எப்படி ? '' அவையில் சிரிப்பொலி ! சந்துரு தொடர்ந்தார்:

தர்மபுரி மாவட்டத்தில் பிரபாகரன், பகத்சிங் என்ற சிறுவர்களை பொடாவின் கீழ் கைது செய்தார்கள். கைது செய்யப்பட்ட போது பிரபாகரனுக்கு வயது 15, பகத்சிங்குக்கு 17, 18 வயதுக்குட்பட்டவர்களை கைது செய்தால், சிறுவர்களுக்கான காப்பகத்தில் சேர்க்க வேண்டும். ஆனால் தமிழகக் காவல்துறை, அவர்களை சிறையில் அடைத்தது, பிரபாகரன், பகத்சிங் என்ற பெயர்களை வைத்திருந்ததாலேயே அவர்களை தீவிரவாதிகளாகிவிட்டது தமிழக காவல்துறை - என்று சந்துரு கூறியபோது, அவையில் சிரிப்பு அலை மிகுந்தது.

இந்த சிறுவர்கள் போலீஸ் வேனில் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லும் படத்தை 'இந்து' நாளேடு வெளியிட்டது. ஆனால் சிறுவர்கள் முறைகேடாகக் கைது செய்யப்பட்டது பற்றி எதுவும் கூறாத தமிழக அரசின் சிறுவர்கள் நல வாரியம் - இந்தப் படத்தை வெளியிட்டது. சிறுவர் நலப் பாதுகாப்பு சட்டத்துக்கு எதிரானது; எனவே, உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது ? என்று 'இந்து' பத்திரிகைக்கு நோட்டீஸ் அனுப்பியது என்றார் சந்துரு.

சிறுவர்கள், பிரபாகரன், பகத்சிங் இருவரும் நடுவர்கள் முன், தமிழில் தாங்கள் சந்தித்த அடக்குமுறைகளை விவரித்த போது, அவையினரும், நடுவர்களும் கனத்த இதயத்தோடு கேட்டனர். மக்கள் கண்காணிப்பக இயக்குனர் ஹென்றி டிபேன் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ''நாங்கள் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள். எங்களுக்கு அரசியல் தெரியாது. எங்களைத் தீவிரவாதிகள் என்று காவல் துறை கைது செய்ததால், சகமாணவர்களிடமிருந்து, நாங்கள் தனிமைப்பட்டு நிற்கிறோம்; நாங்கள் என்ன குற்றம் செய்தோம்; எங்களுக்கே தெரியவில்லை'' என்று உருக்கத்துடன் கூறினர். போலீஸ் காவலிலும் - சிறுவர்கள் காப்பகத்திலும் தங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை விவரித்தார்கள். ''நான் கைதுசெய்யப்பட்டால் எங்கள் பள்ளித்தலைமை ஆசிரியர், மாணவர்களைச் கூட்டி ஒரு மாணவன் எப்படி நடக்கக்கூடாது என்பதற்கு உதாரணம் பகத்சிங் என்று கூறியிருக்கிறார். எனது தாய் மனநலப் பாதிப்புக்கு உள்ளாகி, கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எங்களுக்கு நிகழ்ந்தது போன்ற கொடுமைகள், எங்களைப் போன்ற எந்த சிறுவர்களுக்கும் நிகழக்கூடாது'' என்று பகத்சிங் கூறிய போது, அரங்கமே சோகத்தில் மூழ்கியது.

தர்மபுரி மாவட்டத்தில் 6 பெண்கள் உட்பட, 26 பேர் 'பொடா'வில் முறைகேடாகக் கைது செய்யப்பட்டுள்ளதை வழக்கறிஞர் சந்துரு குறிப்பிட்டபோது, நடுவர்கள், கைதான பெண்கள் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தனர். தமிழ்நாட்டில் நடந்த 'பொடா' அடக்குமுறைகளைக் கேட்டு முடித்த போது, நடுவர் குழுவில் இடம் பெற்றிருந்த திருமதி மோகினி கிரி, ''இனி தமிழ்நாட்டுக்குள் கால் வைப்பதற்கே எங்களுக்கு அச்சமாகி விட்டது'' என்றார்.

### ஜார்கண்ட்

தமிழ்நாட்டைத் தொடர்ந்து - ஜார்கண்ட் மாநிலத்தில் 'பொடா'வால் பாதிக்கப்பட்டவர்கள் - வாக்கு மூலங்களை அளித்தனர். இம்மாநிலத்தில் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 200 பேர். 12 வயது சிறுவனையும், 81 வயது முதியவரையும்கூட 'பொடா' விட்டு வைக்கவில்லை. பொடா கைது எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கும் மாநிலம் இது. காவல்துறை 3200 பேரை 'பொடா' வழக்கில் சேர்க்கப் பட்டியலிட்டுள்ளது. 654 பேர் மீது - முதல் தகவல் அறிக்கை (எப்.அய்.ஆர்.) தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏழைப் பழங்குடிப் பெண்கள் 15 பேர் பொடாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ரூப்னிகரியா என்ற 17 வயதுப் பெண். சிம்லா மாவட்டத்தில் உள்ள மசூரிதோலி எனும் கிராமத்தைச் சார்ந்தவர். அந்தக் கிராமத்திலே ஒரே படித்த பெண்ணாக அவர் மட்டுமே இருந்தார். பெண்களின் உரிமைக்காகப் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார். அதுதான் அவர் நிகழ்த்திய ''பயங்கரவாதம்''. மயாந்தி ராஜ்குமாரி, ஷீலாதேவி என்ற 14 வயதுப் பெண்களும் 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கறிஞர்களும், பத்திரிகையாளரும்கூட - 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளனர். பத்தே வயது நிரம்பிய ஒரு குழந்தைகூட - இம் மாநிலத்தில் 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ள அதிர்ச்சியான தகவலும் வெளிவந்தது.

நாடாளுமன்ற வெடிகுண்டு வழக்கில் பொடாவில் கைது செய்யப்பட்டு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பிறகு உச்சநீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பேராசிரியர் கிலானியின் வழக்கறிஞர் நித்யா ராமகிருஷ்ணன், நடுவர் முன் இந்த தயாரிக்கப்பட்ட ''கதையை'' விவரித்து - ஒரு கேள்வியை எழுப்பினார். 'பொடா' சட்டம் வழங்கியிருக்கும் எல்லை மீறிய அதிகாரங்களைப் பயன்படுத்தி, பொய்க் குற்றச்சாட்டுகளைத் தயாரிக்கும் காவல்துறையினர் - தேசத்தைப் பாதகாக்கும் தேச பக்த வீரர்களாக சித்தரிக்கப்படுவது என்ன நியாயம் ? தேசபக்தி என்பதற்கான அளவுகோல் என்ன ? எது தேசபக்தி ? என்ற கேள்வியை எழுப்பினார். ''இப்போது உடனடியாக செய்யப்பட வேண்டியது, பொடா சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுப்பது அல்ல; பொடா சட்டத்தைப் பயன்படுத்துவதையே தடுப்பது தான்'' என்று வலியுறுத்தி அனைவரின் வரவேற்பையும் பெற்றார்.

முதல் நாள் விசாரணையின் இறுதியில், நடுவர் அருந்ததிராய் வழங்கிய சுருக்கமான கருத்துரையில் - 'பயங்கரவாதம்', 'தேசபக்தியை' பற்றிய பொய்யான பிம்பங்களைப் பரப்பி வரும் பத்திரிகை, தொலைக்காட்சிகளின் பொய்களைக் கடுமையாகக் கண்டித்தார். பொடா சட்டம் மாநிலத்துக்கு மாநிலம் வெவ்வேறு பிரச்சினைகளுக்காக, தவறாகப் பயன்படுத்தப்படுவதைக்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

## நான்கு ஆண்டுகளாக உணவை மறுத்துப் போராடும் வீராங்கனை



பொடா சட்டம் பற்றிய பொது விசாரணையின் இறுதியில் திரையிடப்பட்ட 10 நிமிட குறும்படம் - அரங்கத்தையே இறுக்கமாக்கி விட்டது. அடக்கு முறை சட்டத்தை எதிர்த்து, மணிப்பூர் மாநிலத்தில் 28 வயது வீராங்கனை நடத்தி வரும் வீரப் போராட்டம் அது;

அவரது பெயர் அய்ரோம் ஷர்மிளா. 1972 ஆம் ஆண்டு, மார்ச் 14ம் தேதி, கிழக்கு இம்பால் மாவட்டத்தில் கொங்பால் எனும் கிராமத்தில் ஒரு ஏழைப் பெற்றோருக்கு 9வது மகளாகப் பிறந்தவர். சிறந்த எழுத்தாளர்; கவிஞர்; சமூக சேவையில் முன்னணியில் நின்றவர்; சிறந்த சமூக சேவைக்காக இளம் வயதிலேயே அய்.நா. விருதினைப் பெற்றவர்.

மணிப்பூர் பேரரசராக இருந்த போதா சந்திரா என்பரோடு ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டு, 1949ல் மணிப்பூரை, இந்தியா தன்னுடன் இணைத்துக் கொண்டது. பேரரசர் தனது முடிவுக்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறவில்லை. மணிப்பூர் மக்களின் உணர்வுகளுக்கு எதிரான முடிவு இது. பின்னர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மணிப்பூர் அரசு, இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை சட்டசபையில் அங்கீகரிக்கவும் இல்லை. இந்த நிலையில் மணிப்பூரில் விடுதலை கோரி, இயக்கங்கள் வெடித்தன. மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஒடுக்க, மாநிலம் முழுவதையும் கலவரப் பகுதியாக இந்திய அரசு அறிவித்தது. மாநிலம் முழுதும், ''ராணுவ விசேடச் சட்டம்-1958'' பிரகடனப் படுத்தப்பட்டு, ராணுவத்தின் கீழ் கொண்டுவரப் பட்டது. இந்த நிலையில் 2002 நவம்பர் 2 ஆம் தேதி மணிப்பூரில், மேலோம் என்னும் ஊரில் உள்ள ஒரு இளைஞர் நல மய்யத்தில், அசாம் ராணுவம் நுழைந்து பெண்கள், குழந்தைகள் உட்பட 10 அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றது. பலர் படுகாயமடைந்தனர். இந்தக் காட்சியைப் பார்த்த ஷர்மிளா பதறினார்; பார்வையாளராய் இருக்க விரும்பவில்லை. மணிப்பூரில் அமுல்படுத்தப்பட்ட ராணுவ விசேட சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சாகும் வரை பட்டினிப் போராட்டத்தைத் துவக்கினார்.

தற்கொலைக்கு முயன்ற தாக உள்ளூர் காவல்துறை அவரைக் கைது செய்தது. சிறையில் அடைக்கப் பட்டார்; மூன்று முறை விடுதலை செய்யப்பட்டு, உடனுக்குடன் மீண்டும் கைது செய்யப்பட்டார். ஷர்மிளா தனது போராட்டத்தைக் கைவிடவில்லை. சிறையிலும், ராணுவ மருத்துவமனையிலும் 3 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து மாற்றப்பட்டு வருகிறார். ராணுவம் கட்டாயப்படுத்தி, அவரது மூக்கு வழியாக குழாய் மூலம், திரவ உணவை செலுத்துகிறது. 2002 நவம்பரில் அவரது பட்டினிப் போராட்டம் துவங்கியது. மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகும் அடக்கு முறை சட்டத்தை எதிர்த்த அவரது கொள்கை உறுதி குலையவில்லை; அவர் உணவு உட்கொள்ள மறுத்து வருகிறார்.

அந்த மனித உரிமைப் போராளிக்கு ஆதரவாக மக்கள் உரிமைப் போராட்டம் வெடித்தது. நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. ராணுவம், நீதி மன்றத்தின் மூலம், நீதி விசாரணைக்கும் தடைவாங்கி விட்டது.

ஒவ்வொரு நாளும் தன்னைத்தானே அழித்துக் கொண்டு, அல்லலுறும் அந்த வீராங்கணையால் பேச முடியவில்ல; முணுமுணுக்கிறார். உட்கார முடியவில்லை; நிற்க முடியவில்லை; படுக்கவும் முடியவில்லை; உருண்டு புரளுகிறார்; ராணுவத்துக்குத் தெரியாமல் ஒரு பத்திரிகையாளர் மருத்துமனைக்குள் நுழைந்து ரகசியமாக கேமிராவில் அவரது பேட்டியை பதிவு செய்தார். மெல்லிய குரலில் பேசுகிறார். ''என்னால் பேச முடியவில்லை; நான் அமைதியை விரும்புகிறேன். நீதிக்கு அடித்தளமே அமைதி தான்'' உருண்டு கொண்டே முணுமுணுக்கிறார் - ஷர்மிளா! அரங்கம் முழுதும் இறுக்கம்; கண்களில் நீர்!

நடுவர்களில் ஒருவரான சயீத் அகமது, இதைப் பற்றிப் பேச முயலும் போது, நா தழுதழுக்கிறது; விசாரணையை முடித்து வைத்த, பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி இவ்வாறு கூறினார்:

''இந்த விசாரணையை - நெடுமாறன் துவக்கினார். அது நீதிமன்றம் திணித்த மவுனம்; விசாரணையை - ஷர்மீளாவின் படம் நிறைவு செய்துள்ளது; இது ராணுவம் திணித்த மவுனம்.''

# உலக மகளிர் நாள்: திண்டுக்கல் கழகத்தின் சீரிய பணி

உலக மகளிர் நாளையொட்டி, திண்டுக்கல்லில் மார்ச் 8 அன்று துண்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது. பெரியார் கருத்துகளும், கவிஞர் அறிவுமதி யின் கவிதை வரிகளும் அதில் இடம் பெற்றிருந்தன.

காலை 8 மணியிலிருந்து திண்டுக்கல் புகைவண்டி நிலையம், பேருந்து நிலையப் பகுதிகளிலும், 10 மணிக்கு எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரி முன்பும், 11 மணிக்கு நீதிமன்ற வளாகத்திலும் துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. செம்பட்டி, வலையப்பட்டி தோழர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். திருச்சி, பெரம்பலூர், திண்டுக்கல் மாவட்டங் களில் உள்ள முக்கிய கல்லூரிகளிலும் இவை வழங்கப்பட்டன. துண்டறிக்கையில் இடம் பெற்றிருந்த கருத்துக்கள்:

பெண்களே! கத்தி வைத்துக் கொள்ளுங்கள்!

உண்மையான பெண்கள் விடுதலைக் குப் பிள்ளைப் பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போக வேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்துப் புருஷனை நியமித்துக் கொள்வதாயிருந்தாலும் பெண்கள் உண்மை விடுதலை அடைந்துவிட முடியாது. பெண் களின் விடுதலைக்கும், சுயேட்சைக்கும் கர்ப்பம் விரோதியாய் இருப்பதால், சாதாரண மாய்ப் பெண்கள் பிள்ளை பெறுவதை அடியோடு நிறுத்தி விடவேண்டும். (குடிஅரசு 12.2.1928) - பெரியார்

சீக்கியர்களைப் போல அவர்களும் (பெண்களும்) கத்தி வைத்துக் கொள்ளலாம். இது ஒரு அநாகரீக வழக்கமென்று சில பெண்கள் கருதலாம். ஆனால் ஆண்களின் உதவியின்றி பெண்கள் நடமாட விரும்பி னால், கத்தி வைத்துக் கொள்வது புத்தி சாலித்தனம் என்பதை உணருவார்கள். (குடிஅரசு 10.1.1932)

பெண்களை வீட்டு வேலை செய்வது, கோலம் போடுவது, சாணி தட்டுவது, பாத்திரம் கழுவுவது, கும்மியடிப்பது, கோலாட்டமடிப்பது என்பது போன்ற அடிமை வேலைகளுக்குத் தயார் செய்யாதீர்கள். - பெரியார்

இன்பமும், காதலும் அல்லாமல் வெறும் உலகத்தை நடத்துவதற்கும், உலக விருத் திக்கு என்று பொல பொலவெனப் பிள்ளை களைப் பெறுவதற்கும், ஆண் மக்களுக்கு அவனது வாழ்வுக்கும், கீர்த்திக்கும், திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும் தான் கல்யாணம் என்பதனால், அம்மாதிரிக் கல்யாண வாழ்க்கையில் நமது பெண்மக்கள் ஈடுபடுவதைவிடக் கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப் படி சர்வ சுதந்திரத்தோடு நடந்து கொள்வதையோ தான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். - பெரியார்

சம சுதந்திரத்தில் இயற்கை உணர்ச்சி யில் சமசந்தர்ப்பம் அளிக்கப்படாத முறையைக் கொண்ட கலியாணங்களை நாம் விபச்சார வாழ்க்கை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. (குடிஅரசு 3.3.1929) - பெரியார்

## தோழர் சொக்கலிங்கம் பணியிலிருந்து ஓய்வு

த.பெ.தி.க.வைச் சேர்ந்த சொக்கலிங்கம் 29.02.2004 அன்று மால்கோ தொழிற்சாலையிலிருந்து பணி ஓய்வு பெற்றார்.

அன்று காலை 11 மணிக்கு நடைபெற்ற வாயில் கூட்டத்தில் சி.பி.அய்.எம். கட்சியின் சேலம் மாவட்டச் செயலாளர் எம்.ராஜ கோபால், அய்.என்.டி.யூ.சி. தலைவர் (மால்கோ) ஜெயராமன், சி.அய்.டி.யூ. மாவட்டச் செயலாளர் மனோகரன், மால்கோ சி.அய்.டி.யூ. உதவித் தலைவர் முருகன் ஆகியோர் சொக்கலிங்கத்தின் பணிகளை பாராட்டிப் பேசினர். த.பெ.தி.க.வைச் சார்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் சின்னையன், அங்கமுத்து, அமிர்தராஜ், ஜஸ்டின் ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். த.பெ.தி.க. சார்பில் கழக வெளியீடுகள் அடங்கிய புத்தகக் கட்டு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. அன்று மதியம் சொக்கலிங்கம் ஏற்பாடு செய்த விருந்துக்கு கழகத் தலைவரின் துணைவியார் கமலா கலந்து கொண்டார். சுற்றுப் பயணம் சென் றிருந்த கழத் தலைவர் அன்று இரவு 11 மணிக்கு சொக்கலிங்கம் வீட்டுக்குச் சென்று தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

## குமரன் நகரில் கழகக் கூட்டம்

பெரியாரின் 125 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் 29.02.2004 அன்று மேட்டூர் அணை குமரன் நகரில் நடந்தது. பொன். தேவராசு தலைமையேற்க தலைமைக் கழக பேச்சாளர் கோபி. வேலுச்சாமி உரை நிகழ்த்தினார். முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இரா. பிரபாகரன் நன்றி கூறினார்.

## பொன் நகர் பெரியார் படிப்பக ஆண்டு விழா

பொன் நகரில் உள்ள பெரியார் படிப்பகம், பொது நூலகம் 3 ஆம் ஆண்டு தொடக்க விழா, பெரியார் குருதிக் கொடை மய்யத்தின் ஆண்டு விழா மற்றும் நூலகத்திற்கு செய்தித்தாள்கள் வழங்குபவர்களுக்கு பாராட்டு விழா என மூன்று விழாக்களும் ஒன்றாக நடத்தப்பட்டது. பூவழகன் தலைமை யேற்க, சேலம் மாவட்ட அமைப்பாளர் முல்லைவேந்தன் முன்னிலை வகிக்க, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். 'தினமலர்' பத்திரிகையின் 'தலித்' விரோதப் போக்கை மக்களிடம் கழகத் தலைவர் அம்பலப்படுத்தினார். முன்னதாக பெரியார் படிப்பகத்திற்கு செய்தித்தாள்களை வழங்கும் நன்கொடையாளர்களான மோகனா அர்ச்சுனன், செங்கோட்டையன், டி.பாலு, என்.செல்வக்குமார், ஏ.தமிழரசு ஆகியோரைப் பாராட்டி அவர்களுக்கு கழகத் தலவர் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார். மாவட்ட அமைப்பாளர் முல்லைவேந்தன் தலைமையில் வானவில் சம்பத், பூவழகன், பிரகாஷ், பாலு ஆகியோர் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து விழாவை சிறக்க வைத்தனர். மேட்டூர் நகரம், குமரன் நகர் தோழர்களும் பெருந் திரளாக வந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர். முன்னதாக டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## கழகப் பேச்சாளர் நங்கவள்ளி சீ.அன்பு- விஜியலட்சுமி மணவிழா

த.பெ.தி.க.வின் தலைமைக் கழகப் பேச் சாளரான நங்கவள்ளி சீ.அன்பு- விஜியலட்சுமி ஆகியோரின் வாழ்க்கை துணை நல ஒப்பந்தம் 3.3.2004 இல் நங்கவள்ளியில் ரங்கண்ணா திருமண மண்டபத்தில் காலை 10 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களால் சுயமரியாதை முறையில் நடத்தி வைக்கப்பட்டது.

பார்ப்பனர் தவிர்த்த திருமணத்தின் அவசியம், சடங்கு சம்பிரதாயங்கள் பற்றிய மக்களின் பயம் ஆகியவற்றைப் பற்றி மிக எழுச்சியானதொரு சொற்பொழிவை கழகத் தலைவர் ஆற்றினார்.

## வனவாசியில் கழகக் கூட்டம்

3.3.2004 அன்று மாலை 7.30 மணிக்கு வனவாசியில் (சேலம் மாவட்டம்) த.பெ.தி.க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் முல்லைவேந்தன் தலைமையேற்க, நங்கவள்ளி ஒன்றிய அமைப்பாளர் பெ.கதிர் வேல் வரவேற்புரையாற்ற, தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி.வேலுச்சாமி நகைச்சுவையுடன் மக்களின் மூடநம்பிக்கைகளை விளக்கி மிக நீண்ட சொற்பொழிவாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். மேட்டூரிலிருந்து ஆசிரியர் சின்னையன் உட்பட கழகத் தோழர்கள் பங்கேற்றனர். இரவு உணவு அனைவருக்கும் பெ.கதிர்பேல் இல்லத்தில் வழங்கப்பட்டது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட அருந்ததிராய், இந்த சட்டமே அகற்றப்பட வேண்டும் என்றார்.

## குஜராத் கொடுமைகள்

குஜராத் மாநிலத்தில் - இந்து வகுப்பு வெறி ஆட்சி, பொடாவைப் பயன்படுத்திய அவலங்கள் - இரண்டாம் நாள் விசாரணையில் வெளி வந்தன.

தனது மகன்கள் 'பொடா'வின் கீழ் கைது செய்யப்பட்டு, காவலலில், சித்திரவதை செய்யப்பட்டக் கொடுமைகளை அவர்களின் தந்தையர்களான பீப் கரிமி, ரஷீத் மச்சீஸ் வாலாவும், பொடாவில் சிறையிலிருப்பவரின் மனைவியான யாஷ்மீன் கோச், மற்றொரு பொடா கைதியின் தாயாரான அலிமா மன்சூரியும், காவல்துறை நடத்திய சித்திர வதைகளையும், பொய் வழக்குகளையும் விவரித்தனர். இவர்கள் அனைவருமே முஸ்லீம்கள். ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

அலிமா மன்சூரியின் மகன் அகமது உசேன் - ஒரு மதப் பிரச்சாரகர். முஸ்லீம்களிடம் மட்டுமல்ல, இந்துக்களிடமும் நெருக்கமாகப் பழகியவர். இரு சமூகத்திலும் அவருக்கு நண்பர்கள் அதிகம். அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதைக் கடமையாகக் கொண்டவர். எல்லா மதத்தினருக்கும் உதவுவார். கண்களில் நீர் வழிய - அந்தத் தாய் தனது மகன் சந்தித்த துயரங்களை விவரித்தபோது, அரங்கில் இருந்த அனைவர் கண்களிலும் கண்ணீர்! குஜராத்தில் பொடாவில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 287. இதில் முஸ்லீம்கள் 286. ஒருவர் சீக்கியர். பொடா சட்டத்தின் கீழ் எந்த இந்துவும் கைது செய்யப்படக் கூடாது என்று பொடா சட்டப் பிரிவில் இருக்கிறதா என்று, ஒரு வழக்கறிஞர் கேட்டார். மோடி ஆட்சி, 'பொடா'வை மதவெறிக்காகவே பயன்படுத்துகிறது என்பதற்கு இதைவிட சான்று தேவையில்லை!

## ஆந்திராவில்

ஆந்திராவில் பொடாவில் கைது செய்யப்பட்டவர்கள் 36. வாரங்கல் மாவட்டத்தைச் சார்ந்த காங்கிரஸ் பெண் சட்டமன்ற உறுப்பினர் கொண்டா சுரேக்கா. இவரை பொடாவின் கீழ் கைது செய்ய முயன்றது ஆந்திர அரசு. பலத்த எதிர்ப்புக்குப் பிறகு கைவிட்டனர். மனித உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வரும் டாக்டர் பாலகோபால், கடந்த எட்டு ஆண்டுகளில் போலீசாருடன் மோதியதாகக் கூறப்பட்டு கொல்லப்பட்டவர்கள் 1200 பேர் என்ற அதிர்ச்சியான தகவலைத் தெரிவித்தார். பயங்கரவாதத் தடுப்பு சட்டங்கள், அரசியல் அமைப்புகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனக் கூறிய பாலகோபால், ஆயுதம் வைத்திருந்து கைது செய்யப்பட்ட அரசியல் இயக்கங்களைச் சார்ந்த அனைவருமே, போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்களே தவிர, கிரிமினல் சட்டப்படி வழக்குகளோ, விசாரணைகளோ நடந்த வரலாறு ஆந்திராவில் கிடையாது என்றார். மக்கள் யுத்தக் குழுவினருக்கு, சீருடை தைத்துக் கொடுத்த தையல் கடைக்காரர், 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் - முப்தி முகம்மது சையது தலைமையிலான காங்கிரசின் கூட்டணி ஆட்சி, பொடாவைப் பயன்படுத்தவில்லை என்பது உண்மைதான். ஆனால் பொடாவைவிட மோசமாக அங்கே அமுலில் இருக்கும் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தை அரசு பயன்படுத்துகிறது என்றார், அம்மாநிலத்தில் மனித உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வரும் வழக்கறிஞர் பர்வீஸ் கிம்ரோஸ். ஏற்கனவே ஆட்சியில் இருந்த பரூக் அப்துல்லா ஆட்சி, பொடாவைக் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தியது. இப்போது காஷ்மீரில் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளோர் 89. இது மத்திய உள்துறை அமைச்சகம் தரும் புள்ளி விவரம். மாநில அரசோ, பொடாவின் கீழ் சிறையிலிருப்பவர்கள் 66 பேர் தான் என்கிறது. மற்றவர்கள் என்ன ஆனார்கள்? "காணாமல்" போனவர்களின் பட்டியலில் இடம் பெற்று விட்டார்களா?

## மகாராஷ்டிரா

மகாராஷ்டிராவில் - பொடா சட்டம் பயன்படுத்தப்பட்டது பற்றிய நெஞ்சு பதறும் விவரங்களை பம்பாய் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மஜித்மேமுன் - பொடா கைதியின் தந்தையான நசீர் முல்லா, இருவரும் விவரித்தனர். பொடாவின் கீழ் கைது செய்யப்பட்ட சையத் ஹாஜாயூனுல் என்ற இளம் பொறியாளர் - விசாரணையின் போது, காவல்துறையினரால் அடித்தே கொல்லப்பட்ட அதிர்ச்சியான தகவலை மஜீத் மாமுன் வெளியிட்டார். காவல்துறை மூடி மறைக்க முயன்றது. ஆனாலும் வழக்கறிஞர் மேற்கொண்ட முயற்சியால், நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, காவல் துறை அதிகாரி ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். அந்த அதிகாரியின் பெயர் சச்சின். பல 'நேரடி மோதல்'களை நடத்தி பல படுகொலைகளைச் செய்தவர்; 'என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' என்ற பட்டப் பெயரோடு வலம் வந்து கொண்டிருந்தவர். மகாராஷ்டிராவில் பொடாவில் கைதானவர்கள் 200 பேர். இதில் 10 பேர் சிறுவர்கள்.

மேலும் பல்வேறு மாநிலங்களில் நடந்த அடக்குமுறைகளும் வெளிவந்தன! (தொடர்ந்து 'புரட்சிப் பெரியார் முழக்கம்' அவைகளை விரிவாக வெளியிடும்)

ஜனநாயக நாட்டில் - 'பொடா' சட்டம் என்ற கொடூர ஆயுதத்தை - மக்களை அடிமைகளை விட மோசமாக ஒடுக்குவதற்குப் பயன்படுத்திய நெஞ்சு பதறும் தகவல்களைக் கேட்ட நடுவர்களும், பார்வையாளர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

– விடுதலை இராசேந்திரன்

## விசாரணையில் பங்கேற்றோர்

*புதுடில்லியில் நடந்த பொடா சட்டம் பற்றிய பொது மக்கள் விசாரணையை 16 அமைப்புகள் இணைந்து நடத்தின. இதில் தந்தை பெரியார் திராவிடர் கழகமும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் மக்கள் கண்காணிப்பகம், இதற்கான முன் முயற்சிகளை எடுத்து, ஒருங்கிணைத்து செயல்பட்டது. உ.பி., பஞ்சாப், பீகார், குஜராத் மாநிலங்களைச் சார்ந்த மனித உரிமை அமைப்புகள் மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, 'கம்யூனலிசம் காம்பட்' (மாத இதழ்) ஆகிய அமைப்புகளும் இதில் கலந்து கொண்டன.*

*ஹென்றி திபேன், காலின் கான்சேவ்வங், மிகிர் தேசாய், தீஸ்தா செட்டால் வாட், பிரகாஷ் லூயி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், புதுவை மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் அமைப்பாளர் சுகுமாறன், தேவநேயன் (மக்கள் கண்காணிப்பகம்), ராஜன் (மக்கள் கண்காணிப்பகம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.*

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 19th March 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் 25, 2004 | புரட்சி 3 | முழக்கம் 11 | விலை : ரூ.2.50

## வீரப்பனோடு தொடர்புபடுத்தி – 4 பேருக்கு விதிக்கப்பட்ட

# தூக்கு தண்டனையை ரத்து செய்க!

## பல்லாயிரம் பேர் திரண்ட மனித உரிமை மாநாடு வற்புறுத்தல்

*வீரப்பனோடு தொடர்புபடுத்தி தொடரப் பட்ட வழக்கில் 4 பேருக்கு உச்சநீதி மன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. இந்தத் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று மார்ட்டள்ளியில் நடைபெற்ற மரண தண்டனை எதிர்ப்பு மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.*

**வீ**ரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் காட்டுப்பகுதி கிராமங்களில் நடந்த அத்துமீறல்கள் கொடுமையானவை. அதிரடிப் படையினரின் அட்டூழியத் தால் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் தங்கள் வாழ்வை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில், கடந்த மார்ச் 18ந் தேதியன்று, கருநாடக மாநிலம், கொள்ளேகால் வட்டத்திலுள்ள மார்ட்டள்ளியில், மனித உரிமை இயக்கங்கள் சார்பில், 'மரண தண்டனைக்கு எதிரான மக்கள் மாநாடு' நடைபெற்றது.

கடந்த 1993 ஆம் ஆண்டு கருநாடக மாநிலம், பாலாறு அருகேயுள்ள சொரக்காய் மடுவு என்ற இடத்தில் நடந்த வெடிகுண்டு வழக்கில், வீரப்பன் கூட்டாளிகள் எனக் கூறி சைமன், பிலவேந்திரன், ஞானப்பிரகாசம், மீசைக்கார மாதய்யன் ஆகியோருக்கு உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. இவர்கள் அனை வரும் தற்போது கருநாடகாவில் உள்ள பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். வரும் ஏப்ரல் 16 இல் இவர்களைத் தூக்கிலிட நாள் குறிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தான், மேற்சொன்ன மாநாடு எழுச்சியோடு நடைபெற்றது.

மார்ட்டள்ளியின் பங்குத் தந்தை வின்செண்ட் டிசோசா தலைமையேற்று மாநாட்டை நடத்தினார். இந்த நான்கு பேருக்கும் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவில் முதல் கையெழுத்திட்டு, கையெழுத்து இயக்கத்தைத் தொடக்கி வைத்தார்.

### கொளத்தூர் மணி

இம்மாநாட்டில் கலந்துகொண்ட தந்தை பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி, வீரப்பன் விவகாரத்தில் தமிழக - கருநாடக எல்லையோர பகுதிகளில் மக்கள் துன் புறுத்தப்பட்டனர். அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர். ஏழை பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப் பட்டனர். இப்படியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாக இருந்தவர்கள் இந்த மனித உரிமை இயக்கத்தினர்.

நாங்கள் தண்டனையே கூடாது என்று சொல்லவில்லை. மரண தண்டனை கூடாது என்கிறோம். வீரப்பன் வழக்கில் மட்டுமல்ல, மொத்தத்தில் யாருக்கும் மரண தண்டனை வழங்கக் கூடாது. பல காலமாக இதற்காகப் போராடி வருகிறோம். ராஜீவ் காந்தி கொலையில் 26 தமிழர்களுக்கு தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்ட போது, அதற்காக பழ. நெடுமாறன் தலைமையில் போராடினோம்.

இந்த வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானபிரகாசம் என்னோடு சிறையில் இருந்தவர். அவர் நிறைய புத்தகங்கள் படிப்பார். அவர் என்னிடம் சொல்வார், நான் வீரப்பனைப் பார்த்ததே இல்லை; பார்க்க வேண்டும். வீரப்பனுக்காக இத்தனை வருடம் சிறையில் இருந்து விட்டேன். அவரைப் பார்த்துவிட்டாவது செத்துப் போகிறேன் என்று சொன்னார். அவர் இந்த வழக்கில் தொடர்பில்லாதவர். அவருக்கு தூக்குத் தண்டனை வழங்கி இருக்கிறார்கள்.

தூக்குத் தண்டனை வழங்கப்பட்டவர்கள் இந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்த பகுதியில் மாநாடு நடத்துகிறோம். இதற்கு அதிரடிப் படையினர் தடை போடுகின்றனர். அதிரடிப் படையினருக்கு மனிதாபி மானமே இல்லையா ?

மரண தண்டனை கூடாது என்று இப்போது கையெழுத்து இயக்கம் நடத்துகிறோம். அடுத்து மனித உரிமை அமைப்புகளின் சார்பில், எதிர்வரும் ஏப்ரல் 14 இல் 'மரண தண்டனை எதிர்ப்பு மாநாடு' நடைபெற இருக்கிறது. இதில் அகில இந்திய அளவிலான மனித உரிமை ஆர்வலர்கள் கலந்து கொள்கின்றனர். மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்' என்று கூறினார்.

### அதிரடிப் படை மிரட்டல்!

*தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் சொந்தப் பகுதியில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதை அறிந்து அதிரடிப் படை பதறியது; அந்தப் பகுதியைச் சுற்றி அதிரடிப் படையின் முகாம்கள் இருக்கின்றன. இவர்களின் அடக்கு முறைக்குத் தொடர்ந்து உள்ளாகி வருபவர்கள் அப்பகுதி பொது மக்கள்; மாநாட்டுக்கு முன்பு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மக்கள் கண்காணிப்பக இயக்குனர் ஹென்றி டிபேன் ஆகியோருக்கு எதிராக அதிரடிப் படையினரே சுவரொட்டிகளை மக்கள் பெயரில் அடித்து, இரவோடு இரவாக ஒட்டினர்; உடனே, அப்பகுதி மக்களே சுவரொட்டிகளைக் கிழித்து எறிந்துவிட்டனர். மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று அதிரடிப் படையினர் மக்களை மிரட்டியதோடு, மாநாட்டுக்கு வேன்களில் வந்தவர்களை வழிமறித்து அபராதம் விதித்து, கெடுபிடி களைக் கட்டவிழ்த்துவிட்டனர்; அத்தனை கெடுபிடிகளை யும் தகர்த்து, துணிவோடு, பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடியது, அதிரடிப்படை வட்டாரங்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.*

### ஓட்டு கேட்டு வரும்போது...

தமிழ்நாடு பழங்குடிகள் மக்கள் சங்கப் பொதுச் செயலாளர் வி.பி.குணசேகரன், 'தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டுள்ள பிலவேந்திரன் ஒரு அப்பாவி. இந்த குண்டு வெடிப்பு நடந்தபோது ஈரோட்டிலுள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்தார். அந்த நிறுவனம் வைத்துள்ள பதிவேட்டில் இதற்கான பதிவு இருக்கிறது. அந்த நிறுவன உரிமையாளரே நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதாக கூறினார். ஆனால், அதற்கெல்லாம் காலம் தவறிவிட்டது. மக்கள் மன்றம் மூலம் கருநாடக ஆளுநர், குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு மனு அளிப்போம். மரண தண்டனை ஒழிக்கப்பட தொடர்ந்து போராடுவோம்' என்றார்.

மக்கள் கண்காணிப்பகம் - தமிழ்நாடு இயக்குநர் ஹென்றி டிபேன், 'தேர்தல் பிரச்சாரத்திற்கு தலைவர்கள் வருவார்கள். அவர்களிடம் இந்த கோரிக்கையை எழுப்புங்கள். நான்கு பேருக்கு தூக்குத் தண்டனை ரத்து செய்யக் கோருவதாக இருந்தால் ஓட்டு கேட்க வாருங்கள் என்று சொல்லுங்கள். தற்போது ஆளுநரிடம் மனு அளித்துள்ளோம். தூக்குத் தண்டனை நிறைவேற்ற இங்கு வந்திருக்கிறவர்கள் விடமாட்டோம்' என்றார்.

மக்கள் உரிமைக் கூட்டமைப்பு பொருளாளர் பேராசிரியர் கல்யாணி, 'இந்த மாநாடே அதிரடிப் படையினருக்காகவே நடத்துகிறோம். மனித உரிமை இயக்கங்கள் ஒழுங்காக செயல்பட்டால், வீரப்பனைப் பிடிப்பதாக அட்டூழியம் செய்த அதிகாரி களுக்குத்தான் முதலில் மரண தண்டனை கொடுக்க வேண்டியிருக்கும். மரண தண்டனை இந்த நால்வருக்கு மட்டுமல்ல யாருக்குமே கொடுக்கக் கூடாது' என்றார்.

மக்கள் உரிமைக் கூட்டமைப்பு செயலாளர் கோ.சுகு மாறன், 'உலக அளவில் 122 நாடுகள் மரண தண்டனையை

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

## 'சேலம் கேம்ப்'பில் எழுச்சியுடன் நடந்த ஊர்வலம்

**மே**ட்டூர் சேலம் கேம்ப் பகுதியில் - கழக சார்பில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலமும், பொதுக்கூட்டமும், மார்ச் 20ம் தேதி சிறப்புடன் நடந்தன. மேட்டூர் அணை அருகே 16 கல் பாலத்திலிருந்து பறை முழக்கங்களுடன் ஊர்வலம் புறப்பட்டது. பெண்கள் தீச்சட்டி ஏந்தி, கடவுள் மறுப்பு முழக்கங்களை முழங்கி வந்தனர். தோழர்கள் உடலில் அலகு களைக் குத்திக் கொண்டு கடவுள் பக்திக்கும் அலகு குத்தலுக்கும் தொடர் பில்லை என்பதைக் காட்டி வந்தனர். முதுகில் அலகு குத்தி 2 அம்பாசிடர் கார்களையும், ஒரு மாருதி வேனையும், தோழர்கள் கடவுள் மறுப்பு முழக்கங் களோடு இழுத்து வந்தனர். வீதியின் இருபுறங்களிலும் ஏராளமான பொது மக்கள் இந்தக் காட்சியைப் பார்த்து, பகுத் தறிவு முழக்கங்களைக் கேட்டனர்.

7.30 மணிக்கு வானொலி திடலுக்கு, ஊர்வலம் வந்து சேர்ந்தது. மாநாடு போல் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பொதுக்கூட்டம் துவங்கியது. டிகே.ஆர். கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி யைத் தொடர்ந்து, மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமையில் பொதுக் கூட்டம் தொடங்கியது. தோழர்கள் நங்க வல்லி அன்பு, ஜஸ்டின் ராஜ், முல்லை வேந்தன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் பேசினர். இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

கழகத் தோழர்கள் சரவணன், ஆனந்த், விஜயகுமார், அருள், வெங்கிடு, குமரேசன், சிவக்குமார் ஆகியோர் கடும் உழைப்பில் இந்த நிகழ்ச்சி சிறப்புடன் நடந்தது. பகுதி முழுவதும் ஏராளமான கழகக் கொடிகளும், விளம்பரத் தட்டி களும் காணப்பட்டன.

கோவையிலிருந்து கழகத் தோழர் கோபால் களப்பணி ஒருங்கிணைப் பாளர் பொள்ளாச்சி ரமேஷ், தருமபுரி யிலிருந்து ஆறு முகம் மற்றும் தோழர்கள், நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். சேலம் கேம்ப் பகுதியில் கழக சார்பில் தோழர்கள் பெரியார் படிப்பகத்தை நிறுவி, சிறப்புடன் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. ◆

தலையங்கம்

# கடும் கண்டனத்துக்குரிய ஒப்பீடு!

“பெரியார் வழிக்கும் – காஞ்சிப் பெரியவர் வழிக்கும் அடிப்படையில் வேறுபாடு இல்லை. எனக்கு பெரியாரையும் பிடிக்கும் பெரியவாளையும் பிடிக்கும்”

– என்று சட்டப்பேரவைத் தலைவர் காளிமுத்து சங்கராச்சாரி விழா ஒன்றிலே பேசியிருக்கிறார்.

திராவிடர் இயக்க லட்சியங்களை பார்ப்பனர்களிடம் அடகு வைத்தவர்கள் – அடுத்த கட்டமாக பெரியாரையும், சங்கராச்சாரியோடு கொண்டு போய் சங்கமித்து விட்டால், துரோகப் படலம் முழுமையாகிவிடும் என்று காளிமுத்து கருதுகிறார் போலும்! இது மன்னிக்க முடியாத – கண்டனத்துக் குரிய கருத்து என்பது மட்டுமல்ல; தமிழினத்துக்கு இழைக்கும் பச்சைத் துரோகமாகும்.

பெரியார் மனித சமுதாயத்தின் சமத்துவத்துக்கு உழைத்தவர்; சங்கராச்சாரி வர்ணாஸ்ரமத்தைக் காப்பாற்ற பாடுபடுபவர்; பெரியார் பெண்கள் விடுதலைக்கு புரட்சிக் குரல் கொடுத்தவர்;

சங்கராச்சாரி பெண்களின் எதிரி; பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்பவர்;

பெரியார், ‘விதவை’ என்ற சொல்லே அகராதியில் இருக்கக்கூடாது என்றவர்; சங்கராச்சாரி ‘விதவைகள்’ தரிசு நிலத்துக்கு சமமானவர்கள் என்று அவமதிப்பவர்.

பால்ய விவாகம் முடிக்கப்பட்டு ஏழு வயதில் விதவையான – தனது சகோதரி மகளுக்கு குடும்பத்தார் எதிர்ப்புகளைப் புறக்கணித்து, குடும்பத்தினருக்குத் தெரியாமலே மறுமணம் செய்து வைத்தவர் பெரியார். பிரதமர் இந்திரா காந்தி சந்திக்க வந்தபோது – அவர் ‘விதவை’ என்பதால், தனது குடிலுக்கு வெளியே, ஒரு கிணற்றடியில் இந்திராவை உட்கார வைத்து, குடிலுக்குள்ளே இருந்து, ஜன்னல் வழியாக ‘தரிசனம்’ தந்தவர் இறந்து போன மூத்த சங்கராச்சாரி.

தமிழ் வழிபாட்டு மொழியாவதற்கும் அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கும் – பார்ப்பனர்கள் விதிக்கும் சமூகத் தடைகளை எதிர்த்தவர் பெரியார். சங்கராச்சாரியோ கோயிலுக்குள் தமிழே, தமிழரோ நுழைவதை எதிர்ப்பவர். இதற்காக சில மாதங்களுக்கு முன், சங்கராச்சாரியையே கண்டித்துப் பேசியவர்தான் காளிமுத்து.

தீண்டாமையை எதிர்த்து, வைக்கத்திலே மனித உரிமைக்குப் போராடி வெற்றி கண்டவர் பெரியார்; இன்றைக்கும் சங்கர மடத்துக்குள்ளே தீண்டாமையைப் பின்பற்றுகிறவர் சங்கராச்சாரி.

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக நீதிக்காகப் போராடியவர் பெரியார்; மண்டல் குழு பரிந்துரையைப் பகிரங்கமாக எதிர்த்தவர் சங்கராச்சாரி;

சேரன் மாதேவி குருகுலத்தில் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் தனித்தனி இடத்தில் சாப்பாடு போடுவதை எதிர்த்து, காங்கிரசுக்குள்ளே, போர்க்கொடி உயர்த்தியவர் பெரியார். தனது நிகர்நிலைப் பல்கலைக்கழக விடுதியிலே இன்னமும் இந்த பாகுபாட்டை பின்பற்றிக் கொண்டிருப்பவர் சங்கராச்சாரி!

‘பிராமணன்’ என்ற சொல்லே அகராதியில் இருக்கக் கூடாது; அது பிற மக்களை ‘சூத்திரர்கள்’ என்று இழிவுபடுத்துவதாகும் என்றவர் பெரியார்; “பிராமண” தர்மத்தைக் காப்பாற்றுவதற்காகவே பாடுபடுகிறவர் சங்கராச்சாரி! அவர்களுக்காகவே பல அறக்கட்டளைகளை நடத்துகிறவர்!

“ராமனை” செருப்பாலடிக்கச் சொன்னவர் பெரியார்; பாபர் மசூதியை இடித்த இடத்தில் ராமனுக்குக் கோயில் கட்டத் துடிப்பவர் சங்கராச்சாரி.

தன்னை சந்திக்க வருகிறவர்களை சிறு குழந்தைகள் என்றாலும் எழுந்து நின்று வரவேற்று – மரியாதையோடு நடத்துபவர் பெரியார்; தன்னை சந்திக்க வருவது, குடியரசுத் தலைவராகவே இருந்தாலும், சரிசமமாக உட்கார வைக்க மறுப்பவர் சங்கராச்சாரி;

1930களிலே சிருங்கேரி சங்கராச்சாரி பெரியாருக்குக் கடிதம் எழுதி மடத்துக்கு பேச அழைத்தார்; அந்த அழைப்பை அப்போதே ஏற்க மறுத்தவர் பெரியார்.

பெரியார் மனிதப் பண்பின் இமயம்; சங்கராச்சாரியோ – மனிதர் என்ற இலக்கணத்துக்குள்ளே வராதவர்;

பேரவைத் தலைவர் காளிமுத்துவின் இந்த ஒப்பீடு கடும் கண்டனத்துக்குரியது;

தமிழின உணர்வாளர் என்ற தனித்த அடையாளத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்த டாக்டர் காளிமுத்து – அதைத் தானே தகர்த்துக்கொண்டு, வரலாற்றில் களங்கத்தை தேடிக் கொண்டுவிட்டார்! வருந்துகிறோம்!

# கோவை திருப்பூரில் கழகத்தின் உலக மகளிர் நாள் விழா

திருப்பூரில் 7.3.2004 மகளிர் தினத்தை முன்னிட்டு கழகத்தின் சார்பில் திருப்பூர் இராயபுரம் பகுதி பூங்காத் திடலில் “உலக மகளிர் தின விழா பொதுக்கூட்டம்” நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் சாவித்திரி தலைமையேற்க தோழர் ஜெயந்தி வரவேற்புரை ஆற்றினார். தோழர்கள் முருகேசுவரி, சசிகலா, மல்லிகா, வெண்ணிலா, பேபி, லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித் தனர். முன்னதாக கழகப் பாடகர் தோழர் தியாகு பகுத்தறிவு பாடல்களை பாடினார்.

கூட்டத்தில் திருப்பூர் நகரமன்ற உறுப்பினர்கள் திமுகவை சேர்ந்த பொன்னம்மாள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சரசுவதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சாவித்திரி ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் உரிமைகள் குறித்து உரையாற்றினர். கழகத் தோழர்கள் ப.விசயகுமாரன், மாவட்டத் துணை தலைவர் கண்.பாண்டியநாதன், மாணவரணித் தோழர் ப.விசயகுமார், மாநில நிதிக்குழு உறுப்பினர் இல.அங்க குமார் ஆகியோரும் உரையாற்றினர். பேராசிரியர் பெரியார்தாசன் கலந்து கொண்டு, பெண்களை இந்து மதம் எவ்வாறு அடிமைப்படுத்துகிறது ? இராமாயண, மகாபாரத கதைகள் பெண்ணடிமைத்தனத்தை எவ்வாறு வலியுறுத்துகின்றன என்பது குறித்து ஒன்றரை மணி நேரம் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பெண்கள் பெருமளவு பங்கேற்றனர். இக்கூட்டத்தை தோழர்கள் அ.அகிலன், சி.இராவணன், க.சீனிவாசன், ம.இராமசாமி, அண்ணாத்துரை, க. இளங்கோவன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கோவையில் தந்தை பெரியார் திராவிட மாணவர் கழகம் சார்பில், ‘பெண்களுக்கு மட்டும் எதற்கு ?’ என்ற தலைப்பில் தோழர் சங்கமித்ரா எழுதிய கட்டுரை, கல்லூரிகளில் வினியோகிக்கப்பட்டது. ◆

# அமெரிக்காவில் ‘கடவுள்’ வழக்கு

அமெரிக்காவில் அதிபர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆளுநர்களும் பதவி ஏற்கும் உறுதி மொழியில் - ‘கடவுள்’ என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அமெரிக்கா வாழ் நாத்திகர்களும், சமயச் சார்பற்ற மனிதநேய அமைப்பைச் சார்ந்தவர்களும், இதை எதிர்த்து வருகிறார்கள். இதற்காக அமெரிக்க உச்ச நீதி மன்றத்தில், இப்போது வழக்கு ஒன்று தாக்கலாகியுள்ளது. உச்ச நீமின்றத்தின் - புகழ் பெற்ற நாத்திக வழக்கறிஞர் ஒருவர், இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அவரே - இம்மாத இறுதியில் விசாரணைக்கு வர இருக்கும் இந்த வழக்கில் வாதாட இருக்கிறார். முதல் கட்டமாக, உச்சநீதி மன்றத்தினர் நீதிபதியாக இருக்கும் அன்டோனின்ஸ்கேலியா, இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்று நாத்திகர்கள் வலியுறுத்தினர். இந்த நீதிபதி தீவிரமான மத ஆதரவாளர். ‘கடவுள்’ என்ற சொற்றொடர் நீக்கப் படக்கூடாது என்று வெளிப்படையாகவே கருத்து தெரிவித்தவர். எனவே வழக்கு விசாரணையில், அவர் இடம் பெறக்கூடாது என்ற கருத்தை, அமெரிக்க உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதுவே நாத்திகர்களுக்குக் கிடைத்த முதல் வெற்றி என்று, அமெரிக்க நாத்திகர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

“நான் அமெரிக்க தேசியக் கொடியின் பெயரால் - கடவுளின் கீழே பிரிக்க முடியாத ஒரே தேசமாகத் திகழும் அமெரிக்கக் குடியரசில், சுதந்திரத்தையும், நீதியையும் அனைவருக்கும் வழங்க உறுதி எடுக்கிறேன்” என்பது தான், அமெரிக்காவில் அரசியலமைப்பின் கீழ் பதவி ஏற்பவர்கள் எடுக்கும் உறுதி மொழியாகும். அண்மையில் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில், தம்பா நகரில், மதச்சார்பற்ற மனித நேய அமைப்பினர் மாநாடு ஒன்றை நடத்தினர். நூற்றுக்கும் மேற்பட்ட நாத்திகர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் அமெரிக்காவின் பதவி ஏற்பு பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள ‘கடவுள்’ என்ற சொல்லை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். “உங்கள் குழந்தைகளுக்கு பைபிள் ஒரு கற்பனைக் கதை என்று சொல்லுங்கள். ஹாரி போட்டர் கதையைப் போன்றது தான் பைபிளும்; ஹாரிபோட்டர் கதைகளில் வரும் கற்பனை சம்பவங்களை, நம்ப வைப்பது போலவே - பைபிளையும் நம்பச் சொல்கிறார்கள் என்பதை குழந்தைகளுக்கு விளக்க வேண்டும்” என்று மாநாட்டில் இல்லினாய் பகுதியைச் சார்ந்த ஒரு தலைமை ஆசிரியர் பேசினார். “அமெரிக்கா கடவுளின் கீழே இல்லை; அது கனடாவுக்கு கீழேயும், மெக்சிக்கோவுக்கு மேலேயும் இருக்கிறது” என்றார் மாநாட்டின் தலைவர்.

அமெரிக்காவின் பள்ளிகளில் ஒவ்வொரு நாளும் கட்டாயம் பைபிள் படிக்க வேண்டும் என்ற நடைமுறை இருந்தது. இதை எதிர்த்து அமெரிக்க நாத்திகர் மேடலின் முர்ரே ஹேர் என்பவர் **1963**ம் ஆண்டிலே உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றார். அதற்குப் பிறகு, நாத்திர்கள் - இப்போது மேற்குறிப்பிட்ட பிரச்சினைக்காக உச்ச நீதிமன்றம் போயிருக்கிறார்கள்.

அமெரிக்க நாட்டின் உறுதி மொழிக்கு முதலில் **1892**ல் வடிவம் கொடுத்தவர், பிரான்சிஸ் பெல்லாமி என்கிற பாதிரியார். இவர் தயாரித்த உறுதிமொழியில் ‘கடவுள்’ இடம் பெறவில்லை; அவர் ஒரு இடதுசாரி சிந்தனையாளர். அதற்காகவே அவர் பாஸ்டன் சர்ச்சிலிருந்து, அடுத்த ஓராண்டில் வெளியேற்றப்பட்டார். பிறகு **1954**ல் மதப் பழமைவாதிகள், உறுதி மொழியில் கடவுள் என்ற சொல்லை சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி இயக்கங்களை நடத்தினர். நாத்திக கம்யூனிச நாடுகளிலிருந்து அமெரிக்காவை வேறுபடுத்திக் காட்ட இந்த சொல் இடம் பெற வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தினர்.

இந்த உறுதிமொழியைப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் - வகுப்புகளைத் துவங்கும் போது கட்டாயமாகக் கூற வேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. இதை எதிர்த்து கலிபோர்னியாவைச் சார்ந்த டாக்டரும், தீவிர நாத்திகரமான நியுடோ என்பவர் வழக்குத் தொடர்ந்தார். தனது மகளுக்கு, பள்ளியில் - ஆசிரியர், கடவுள் நம்பிக்கையைத் திணிப்பதை எதிர்த்து அந்த வழக்குதொடரப்பட்டது. ஆனால், தனது மகளின் தாய், டாக்டருக்கு, சட்டப்படியாக திருமணம் செய்து கொண்ட மனைவி அல்ல என்பதால், அவருக்கு வழக்குத் தொடரும் உரிமை கிடையாது என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. ஆனாலும், மாசூசெட் மாநில ஆளுநராக இருந்த மைக்கேல்டுக் காக்கில், தனது ஆளுநர் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆசிரியர்கள் உறுதிமொழியைக் கூறும் முறையை ரத்து செய்தார். **1988** ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசுத் தலைவர் தேர்தலில் - அதிபர் பதவிக்கு இவர் போட்டியிட்டார். அப்போது இவரை எதிர்த்து போட்டியிட்ட ஜார்ட்ஜ எச்.டபிள்யூ புஷ், (இப்போதைய அதிபரின் தந்தை) இந்தப் பிரச்சினையை முன்வைத்து மைக்கேலைக் கடவுள் எதிர்ப்பாளர் என்று குறை கூறினர். இப்போது அமெரிக்க அதிபராக இருக்கும் புஷ் - தீவிர மத ஆர்வலர்; பல மத நிறுவனங்களுக்கு, அரசு சார்பாக, பிரச்சாரத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார். நாத்திகர்கள் தொடர்ந்துள்ள இந்த வழக்கு வெற்றி பெற்று விட்டால், இந்த நிதி உதவிகள் நிறுத்தப்பட்டு விடும் என்பது மதவாதிகள் அச்சம்.

இந்தியாவில் முதன் முதலாக தமிழ்நாட்டில் தான், தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது - **1967**ல், கடவுள் பெயரால் உறுதி மொழி எடுக்காமல் ‘உளப் பூர்வமாக’ என்ற சொல்லைப் பயன்படுத்தி, சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் பதவி ஏற்றனர். ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்த பிறகு, இதை மாற்றி “ஆண்டவன் பெயரால் ஆணையிட்டு” உறுதி ஏற்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தினார். ஜெயலலிதா அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த நாவலர் நெடுஞ்செழியன் மட்டும் கடைசி வரை கடவுள் பெயரால் உறுதி மொழி எடுக்காமல் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ◆

## முகவை கழகம் வழி காட்டுகிறது!

மார்ச் 28ம் தேதி ஈரோட்டில் நடக்க இருக்கும் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களின் மாநில கலந்துரையாடல் கூட்டத்தில் முகவை மாவட்டக் கழக சார்பில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு 50 சந்தாக்களை தோழர்கள் அளிக்க இருக்கிறார்கள். கழகத் தோழர்கள் இதற்கான தீவிரப் பணிகளில் செயல்பட்டு வருகின்றனர்.

## விழு; எழு!

கல்வியில்
விடி
அரசியல்
தெளி
கூட்டங்கள்
செய்
ஊர்வலம்
போ
முழக்கமிடு
பெண்ணைப்
பேசப்
பெண்ணே
எழு
கனவைச்
சுருட்டு
புனிதம்
விரட்டு
தீது
செயற்கை
காத்திருக்காதே
கற்பு
உடலுக்கு
காதல்
உயிருக்கு
காதலி
நச்சுக்
கொடி
தாலி
வளையல்
விலங்கு
குருதிப்
பிணம்
குங்குமம்
கூந்தலைச்
சுருக்கு
நகைகளைக்
கழற்று
அலங்கரிக்க
மறு
ஆயுதம்
எடு
பெரியார்
தொடு
சடங்குகள்
மிரளப்
புதிதாகு
ஆண்பெண்
சுவர்
இடி
நட்பில்
பால்
சிதை
ஆண்பெண்
சமன்
செய்
அறிவில்
முகம்
கொள்
சிலை
கட
முகம்
தொலை
பெயர்
மற
புகழ்
சும்மா
எதார்த்தங்களில்
இடறு
விழு
விழுந்து
விழுந்து
எழு
பேசு
பேசு
குழுக்
குழுவாய்ப்
பேசு
முரண்
படு
மோது
எதிரிகள்
நெருக்க
நெருக்க
காண்
இயக்கம்.

**~ கவிஞர் அறிவு மதி**

'உலக மகளிர் நாளையொட்டி - திண்டுக்கல் கழகத் தோழர்கள் வெளியிட்ட துண்டறிக்கை

# குஜராத்தில் முஸ்லீம்களைக் 'குதறிய' பொடா

குஜராத்தில் தீவிரவாதிகளோ, தீவிரவாத இயக்கங்களோ கிடையாது. இந்த நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டமான பொடாவைப் பயன்படுத்துவது எப்படி ? பொடா சட்டத்தைப் பயன்படுத்தி தீவிரவாதிகளைத் தயார் செய்து - பிறகு பொடாவை அவர்களுக்கு, எதிராகப் பயன்படுத்துவதே, மோடி அரசு உருவாக்கிய திட்டம். குஜராத்தில் 'பொடா பயங்கரவாதத் **தடுப்பு** சட்டம் அல்ல; பயங்கரவாதிகளைத் **தயார்** செய்யும் சட்டம் (Production of Terrorist Act) என்றார் குஜராத்தில் மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வரும் டாக்டர் முகுல் சின்ஹா புதுடில்லியில் மார்ச் 13, 14 தேதிகளில் நடந்த பொடா சட்டம் பற்றிய மக்கள் தீர்ப்பாயத்தில் குஜராத்தில் பொடா அத்துமீறல்கள் பற்றி அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவந்தன.. குஜராத்தில் பொடாவில் கைது செய்யப்பட்ட வர்கள் 287. இதில் முஸ்லீம்கள் மட்டும் 286. ஒருவர் சீக்கியர்; மகாராஷ்டிராவில் மனித உரிமைக்குப் போராடும் வழக்கறிஞர் மேமோன் - குஜராத் உள்துறை அமைச்சரை நேரில் சந்தித்த போது, இதைச் சுட்டிக்காட்டி, அவரிடமே கேட்டார், "பொடாவில், இந்துக்கள் கைது செய்யப்படக் கூடாது என்று தனிப் பிரிவு இருக்கிறதா ?" - இதற்கு உள்துறை அமைச்சரிடமிருந்து பதில் ஏதுமில்லை; விசாரணையில் மேமோன் வெளியிட்ட தகவல் இது.

குஜராத்தின் கொடூரங்கள் - நடுவர்களையும், பார்வையாளர்களையும் உலுக்கியது. குஜராத்திலிருந்து நான்கு பேர் சாட்சியமளித்தனர். இருவர் பொடாவில் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் தந்தையர். ஒருவர் பொடாவில் கைது செய்யப்பட்ட இளைஞரின் மனைவி, மற்றொருவர் பொடா கைதியின் வயது முதிர்ந்த விதவைத் தாய்.

காவல் துறையிடம் தரும் ஒப்புதல் வாக்கு மூலத்தை குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்ற பொடா சட்டப் பிரிவு - காவல்துறையின் வேலையை எளிதாக்கிவிட்டது. நீண்டகாலம், காவல் நிலையத்திலேயே விசாரணை நடத்தலாம் என்று பொடாவில் மற்றொரு வசதி இருக்கிறது. இதைப் பயன்படுத்தி ஒப்புதல் வாக்கு மூலம் பெறுவதற்கு தொடர்ந்து காவல் நிலையத்துக்குள்ளே சித்திரவதைகள் நடத்தப்படுகின்றன.

குஜராத்தில் பெரும்பாலான பொடா கைதிகள் - நான்கு வழக்குகளைச் சுற்றியே இருக்கின்றன.

● குஜராத்தில் ஒரு யுத்தத்தை நடத்த - சதித் திட்டம் வகுக்கப்பட்டு, அதற்காக பயங்கர வாதங்கள் நடத்தப்பட்டன என்பது ஒரு வழக்கு. என்ன பயங்கரவாதங்கள் நடந்தன என்ற விளக்கமும் இல்லை. இந்தக் குற்றசாட்டின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள முஸ்லிம் இளைஞர்கள் 82 பேர்; கைது செய்யப்பட்டுள்ளோர் - 44 பேர்.

● மற்றொன்று 'டிபன் பாம்ப்' வழக்கு. 'டிபன் பாக்சில்' சக்தி குறைவான குண்டுகள் வைக்கப்பட்டு, அகமதாபாத் நகரின் பல்வேறு பகுதிகளில் வெடித்தன. சிலர் காயமடைந்தனர்; இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லீம்கள் 21; கைது செய்யப்பட்டோர் 17.

● ஹரேன் பாண்டியா என்ற முன்னாள் அமைச்சர் கொல்லப்பட்ட வழக்கு. இதை சி.பி.அய். விசாரிக்கிறது. குற்றம் சாட்டப்பட்டோர் 19; கைதானோர் 15. விசுவ இந்து பரிஷத் மற்றும் பா.ஜ.க. முக்கிய தலைவர்களைக் கொல்ல சதி செய்தார்கள் என்பது மற்றொரு வழக்கு. இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் 7 பேர்.

இந்த வழக்குகளில் - குற்றம் சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கையை எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரித்துக் கொள்ளலாம். அதற்கேற்ப எப்.அய்.ஆர். தயாரிக்கிறார்கள். இந்த வழக்குகளினால், முஸ்லீம் சமூகம் முழுதும், அச்சுறுத்தப் பட்டது. ஒவ்வொரு நாளும், உள்ளூர் பத்திரிகைகளில் - முஸ்லீம் இளைஞர்கள் கைது செய்யப்படும் செய்திகள் பரபரப்பாக வெளிவருவதைக்கண்ட, "இந்து"க்கள் - முஸ்லீம் சமூகத்தை சந்தேகத்துடன் பார்க்கத் துவங்கினர். இதனால் இந்து-முஸ்லீம் பிளவு கூர்மையாக்கப்பட்டது. இதுவே குஜராத்தில் 'பொடா'வைப் பயன்படுத்தி மோடி ஆட்சி உருவாக்கிய சதி !

டாக்டர் முகுல்சின்கா, குஜராத்தில் 'பொடா'வின் கொடூரங்களை தனது சாட்சியத்தில் விரிவாக எடுத்துரைத்தார்.

● கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் 27 பிப்ரவரி 2002ல் நடந்தது. அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டு, பொடாவின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மார்ச் 25 ஆம் தேதி, ஒரு மாதத்துக்குப் பிறகு கோத்ரா சம்பவ வழக்குகளில் 'பொடா'வை அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது. 'பொடா' வழக்குக்கு ஏற்ப - குற்றப் பத்திரிகைகளும் தயாரிக்கப்பட்ட பிறகு, அரசு பொடாவைத் திரும்பப் பெற்றதற்குக் காரணம், முஸ்லீம்கள் மீதுள்ள நல்லெண்ணத்தால் அல்ல; கோத்ரேவைத் தொடர்ந்து சங்பரிவார் கும்பல் திட்டமிட்டு நடத்திய படுகொலைகள், வன்முறைகள் தொடர்பான வழக்குகளுக்கும், 'பொடா'வைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் என்பதால், கோத்ரா வழக்கில் 'பொடா'வைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. மே மாதத்தில் கோத்ரா வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு முன்பே - சங் பரிவார்களின் வன்முறைகள், படுகொலைகள் துவங்கி விட்டன. எனவே 'பொடா' விலக்கிக் கொள்ளப்பட்டது.

● கோத்ரா வழக்கில் - அரசின் குற்றப் பத்திரிகை - "வகுப்பு மோதல்களின் மோசமான விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் - இந்துக்களின் கொந்தளிப்பு என்ன விளைவுகளை உருவாக்கும் என்பது பற்றிக் கவலைப்படாமல், முஸ்லீம்கள் கோத்ரா ரயில் பெட்டிக்குத் தீ வைத்தனர்" என்று கூறுகிறது. 'சங்பரிவார்' கும்பல் 'பந்த்' நடத்தி, 'நரோடா-பாட்டியா' எனுமிடத்தில், 58 பெண்களையும், குழந்தைகளையும் கொன்று குவித்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையில் என்ன கூறப்பட்டிருந்தது ? வகுப்புக் கலவரத்தால் உருவாக்கக்கூடிய விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், இந்தப் படுகொலைகளை "இந்துக்கள்" செய்தார்கள் என்று கூறவில்லை. மாறாக கோத்ரா வன்முறை சம்பவத்துக்கு பதில்தரும் நோக்கத்தோடு, இந்த வன்முறைகளை செய்ததாகக் குற்றப் பத்திரிகை கூறுகிறது. மோடி என்ன சொன்னாரோ, அதேயே காவல்துறை பதிவு செய்கிறது. பிப்ரவரி மாதத்தில் நடந்த ஒரு சம்பவத்துக்காக - கொதிப்படைந்து, மூன்று மாதங்களுக்குப் பிறகு, மே மாதத்தில் மக்கள் எதிர் நடவடிக்கையில் இறங்கினார்களாம்.

● இதற்குப் பிறகு ஹரேன் பாண்டியா என்ற முன்னாள் அமைச்சர் கொல்லப்படுகிறார். ஜெகதீஷ் திவாரி என்ற விசுவ இந்து பரிஷத் தலைவர் சுடப்படுகிறார்; இந்த வழக்கில் பொடாவில் கைது செய்யப்பட்ட முஸ்லீம் இளைஞர்கள் மீது குற்றப் பத்திரிகையில் காவல்துறை என்ன சொல்லியது ? நரோடா பாடியா சம்பவத்துக்கு பதில் தரும் நடவடிக்கை என்று சொல்லவில்லை ! பழிவாங்கும் நோக்கத்தோடு மேற்கொண்ட பயங்கரவாதம் என்கிறது குற்றப்பத்திரிகை. இந்து தீவிரவாதிகளின் வன்முறை என்றால் அதற்குப் பெயர் பாதிக்கப்பட்டவர்களின் பதிலடி நடவடிக்கை; அதையே ஒரு முஸ்லீம் செய்தால் - பயங்கரவாத பழிவாங்கும் நடவடிக்கையா ?

● நரோடாபாடிய வன்முறையில் சங்பரிவார் மீது 'பொடா' சட்டம் பாயவில்லை. அதைத் தொடர்ந்து ஹரேன் பாண்டியா கொலை வழக்கில் கைதான முஸ்லிம்கள் மீது மட்டும் 'பொடா'.

● கதை இதோடு முடிந்துவிடவில்லை. கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 75 பேர் மீது ஓராண்டுக்குப் பிறகு (2003 மார்ச் 18ல்) மீண்டும் 'பொடா' போடப்பட்டு, அவர்களை பிணையில் வெளிவராமல் தடுத்து விட்டார்கள்; கோத்ராவைத் தொடர்ந்து நடந்த படுகொலையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனைவருமே (ஒருவர் மட்டும் நீங்கலாக), பிணையில் வெளியே வந்து விட்டனர். அரசியல் சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்பதற்கான அர்த்தம் இது தானா ?

● நரேந்திர மோடியைக் கொலை செய்ய சதி நடந்ததாகக் கூறி - 14 முஸ்லீம் இளைஞர்களை கைது செய்தனர். ஆனால் இவர்கள் மீது 'பொடா'வில் வழக்குப் பதியவில்லை. வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம், விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே - இது எந்த ஆதாரமும் இல்லாத கற்பனை வழக்கு என்று கூறி, தள்ளுபடி செய்துவிட்டது. குஜராத்தில் - பாகிஸ்தான் மறைமுகமாக ஒரு யுத்தம் நடத்திக் கொண்டிருப்பதாக குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டிருந்ததை நீதிமன்றம் சுட்டிக்காட்டி, "இது வழக்குக்கான குற்றப் பத்திரிகையாக இல்லாமல் கட்டுரை போல இருக்கிறது" என்று கூறியது. பெயரை மாற்றி போபால் பாஸ்போர்ட் அலுவலகத்தில் சமீர்கான் என்பவர் பாஸ் போர்ட் வாங்கிக் கொண்டு, ஜனவரி மாதம் பாகிஸ்தானுக்குப் போய் ரகசியமாக ஆயுதப் பயிற்சி எடுத்து வந்ததாகக் குற்றப் பத்திரிகை கூறியது. அவர் பாஸ் போர்ட் வாங்கியதே மார்ச் மாதத்தில் தான் என்று பாஸ் போர்ட் அதிகாரி கூற, காவல்துறை உருவாக்கிய பொய் அம்பலமானது. மோடியின் காவல்துறை பொய் வழக்குகளைப் போடுவதற்கு, இவை எல்லாம், சில உதாரணங்கள். டாக்டர் முகுல்சின்ஹா பட்டியலிட்டதை கனத்த இதயத்துடன் உன்னிப்பாகக் கேட்டனர் நடுவர்.

திகார் சிறையில் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டு 7 மாதங்களுக்குப் பிறகு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ள பத்திரிகையாளர் ஜிலானி, நடுவர்கள் முன் சாட்சியமளித்தார். இவரது கம்ப்யூட்டரில் தேசத் துரோக ஆவணங்கள் இருந்ததாக - 20002 ஜூன் 9ல், இவர் பொடாவில் கைது செய்யப்பட்டார். இணையத்தளத்தின் வழியாக - யார் வேண்டுமானாலும், அந்தக் கட்டுரையைப் படிக்கலாம். கைது செய்யப்பட்ட அடுத்த நாளே - ஜிலானியின் மனைவி, அந்த ஆவணத்தை டெல்லி போலீசாரிடம் காட்டினார். அந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் எந்தக் குற்றமும் இல்லை. பாகிஸ்தானுக்கு எதிரான கருத்துகளே அதில் இடம் பெற்றிருந்தன. பாகிஸ்தான் நாட்டின் குற்றங்களை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று ஜிலானி, 'ஈமெயில்' கடிதங்களை பலருக்கும் அனுப்பினார். "இந்த ஈமெயிலைப் படித்த நீதிபதி, இதற்காகவே உனக்கு பிணை மறுப்பதாக அறிவித்தார்" என்று ஜிலானி கூறிய போது நடுவர்களும் பார்வையாளர்களும் குபீர் என்று சிரித்தனர். பல பொடா நீதிமன்றங்களின் நிலை இப்படித் தான் என்றார் ஜிலானி.

- விடுதலை இராசேந்திரன்

"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

## பேரநாயக்கனூரில் புதிய கிளை

18.1.2004 ஞாயிறு மாலை ஈரோடு அருகில் உள்ள 'பேரநாயக்கனூர் கிராமத்தில் மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, சத்தி ஒன்றியச் செயலாளர் புதுரோடு-சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் புதிய கிளை உருவானது.

29.2.2004 ஞாயிறு மாலை 7 மணி அளவில் தோழர் விசயக்குமார் இல்லத்தில் மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் மீண்டும் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மாவட்ட ப.க. தலைவர் இரா.காளியண்ணன், சதுமுகை. பழனிச்சாமி, மாவட்ட ப.க.செ யலாளர் நேதா. ஆசைத்தம்பி ஆகியோர் பேசிய பின்னர் இறுதியாக மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் 'தந்தை பெரியார் திராவிடர் கழகம் எதற்காக? யாருக்காக இயங்குகிறது? என்ன பணிகளை செய்து கொண்டுள்ளது! என்ன பணிகளை செய்ய உள்ளது?' என்பது குறித்து விளக்கிப் பேசினார். இக்கூட்டத்தில் சத்தி ஒன்றிய செயலாளர் சிதம்பரம், கோபி செயராமன், புதுரோடு இராசேந்திரன் உட்பட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர். 21 தோழர்கள் புதிதாக கழகத்தில் இணைந்தனர்.

விரைவில் கழகக் கொடிக்கம்பம், பெயர்ப் பலகை அமைப்பது, பொதுக்கூட்டம் நடத்துவது; பெரியார் முழக்கம் இதழுக்கு சந்தா செலுத்துவது; ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பேரநாயக்கனூர் கிளைத் தலைவராக தோழர் க.முத்துசாமி, செயலாளராக தோழர் விசயக்குமார், அமைப்பாளர் தோழர் லோகநாதன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர்.

## மதுரை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம்

14.3.2004 ஞாயிறு மாலை 6 மணிக்கு பீபிகுளம் தந்தை பெரியார் படிப்பகத்தில் மதுரை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் மாவட்டத் தலைவர் மா.மாயாண்டி தலைமையில் நடைபெற்றது. படிப்பகத்தின் முன் கழகக் கொடியை தலைவர் ஏற்றி வைத்தார். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 2004 மே மாதத்தில் வைகை அணையில் கழகக் குடும்ப விழா நடத்துவது.

2. மாதந்தோறும் மாவட்டக் கலந்துரையாடல் நடைபெறும் பகுதியில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது.

3. ஈரோட்டில் நடைபெறும் மாநில கலந்துரையாடலில் மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்வது.

4. ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி விராட்டிபத்து கற்பூரம் நாகராசன் ஏற்பாட்டில், அப்பகுதியில் தெருமுனைக் கூட்டங்களும், மாவட்டக் கலந்துரையாடல் கூட்டமும் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது.

கலந்துரையாடலில் மாவட்டத் துணைத் தலைவர் கைவண்டிக் கருப்பு, பொருளாளர் அ.இராசேந்திரன், செயலாளர் குமரேசன், இணைச் செயலாளர் சோ.சி.பாலகிருட்டிணன், துணைச் செயலாளர் அ.பெரியசாமி, அமைப்பாளர் பா.ஸ்டாலின், பகுத்தறிவாளர் கழகத் தலைவர், கற்பூரம் நாகராசன், அனுப்பானடி ஆ.முருகேசன், மு.தமிழ்ப் பித்தன், பீபிகுளம் கண்ணன், சீனிவாசன், சரவணக்குமார் மற்றும் இளைஞரணி தலைவர் சின்னத்தம்பி மற்றும் பகுதி தோழர்களும் கலந்து கொண்டனர்.

பொருளாளர் அ.இராசேந்திரன், அவரது துணைவியார் இராசாமணி இருவரும் அனைவருக்கும் தங்கள் இல்லத்தில் புலால் உணவு வழங்கினர். ◆

# 'சங்பரிவார்' மாநாடாக மாறிய 'மகாமகம்'

குடந்தையில் நடந்த 'மகாமகத்தை' - சங்பரிவார், தனது விழாவாக மாற்றிக் கொண்டுவிட்டது. இதற்கு ஜெயலலிதா ஆட்சியும் உடந்தையாகவே இருந்தது. மகாமகத்தை ஒட்டி, இதற்கான தீவிர ஏற்பாடுகளைச் செய்து வந்த மாவட்டக் காவல்துறை அதிகாரி, வருவாய் துறை அதிகாரி இருவரும் மகாமகத்துக்கு முன் திடீர் என மாற்றப்பட்டனர். இவர்கள் இருவரும் 'தலித்' சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் சங்கராச்சாரி ஆலோசனைப்படி, இது நடந்ததாகக் கூறப்படுகிறது.

மாவட்டக் காவல்துறையின் சார்பில் மகாமகத்துக்கு முழுக்கு போட வருமாறு பக்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டன. காவல்துறையே ஆர்.எஸ்.எஸ்ஸாக மாறிப் போனது.

'பிரன்ட் லைன்' ஏடும் - இதுபற்றி பல தகவல்களை வெளியிட்டுள்ளது.

- குடந்தையை சுற்றி ஏராளமான சுவரொட்டிகளை ஒட்டிய விசுவ இந்து பரிஷத், அயோத்தியில் ராமன் கோயிலைக் கட்டும் கட்சிக்கே, இந்துக்கள் ஓட்டளிக்க வேண்டும் என்று அதில் கோரியது. பசுவதைத் தடைச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்றும், இந்துக் கோயில்களை தனிவாரியமாக்க வேண்டும் என்றும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான சிறப்புரிமைகள் திரும்பப் பெறவேண்டும் என்றும் அரசு சுவரொட்டிகளில் வலியுறுத்தப்பட்டிருந்தன.
- முழுக்குப் போட்டு, தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொள்ளும் "தீர்த்தாவதி" நேரம் பார்த்து, விசுவ இந்து பரிஷத் தொண்டர்கள் காவிக் கொடிகளுடன் குளத்துக்குள் இறங்கினர்; காவல்துறையினரும், அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டனர்.
- 1400 விசுவ இந்து பரிஷத் தொண்டர்களும், 400 ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களும், குடந்தையில், முன்கூட்டியே முகாமடித்து, நகரத்தைச் சுற்றிலும் ஒரு லட்சம் சுவரொட்டிகளை ஒட்டி, 75000 காவிக் கொடிகளையும் கட்டினர்.
- வி.இ.ப. மய்யங்களில் - 3,50,000 உணவுப் பொட்டலங்கள், 10 நாட்களும் வினியோகிக்கப்பட்டதாக நிர்வாகி ஒருவர் கூறினார்.
- மார்ச் 3, 4 தேதிகளில், விசுவ இந்து பரிஷத் குடந்தை நகரில், துறவிகள் மாநாடு ஒன்றையும் நடத்தியது. காஞ்சி சங்கராச்சாரி, அசோச்சிங்கால் மற்றும் சைவ மடாதிபதிகள் இதில் கலந்து கொண்டனர்.
- மத நல்லிணக்கத்தோடு, பல்வேறு முஸ்லீம், கிறிஸ்தவ அமைப்புகளும், பக்தர்களுக்கு இலவச உணவு வழங்க, அரிசிகளை வழங்கின என்றாலும், 'சங்பரிவார்' தனது விழாவாகவே மாற்றிக் கொண்டது.
- மகாமகத்துக்கு முன், மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர், இந்தத் திருவிழாவை எந்தக் குறிப்பிட்ட அமைப்பும், தங்களின் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்ற வலியுறுத்தினார்; மாவட்ட ஆட்சித் தலைவரும் ஏற்றுக் கொண்டார். ஆனால் சங்பரிவார்களின் சுவரொட்டிகளும், தலையீடுகளும் தடுக்கப்படவில்லை, சுவரொட்டிகளை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் நிர்வாகம் புறக்கணித்துவிட்டது. ◆

# காசி கோயிலை அவுரங்கசீப் ஏன் இடித்தார்

தற்பொழுது காவிமயமாக்கப்படும் வரலாறு, "இசுலாமியர்களை, கோவிலைக் கொள்ளையடித்தவர்கள்; அவர்களுக்குத் தந்தை / சகோதரப் பாசம் கிடையாது" என்று அறிமுகப்படுத்துகிறது.

"தந்தையை, சகோதரனைக் கொன்று விட்டு ஆட்சியைப் பிடித்த இந்து மன்னர்களும் உண்டு. கி.மு.430 இல் மன்னனாக இருந்த அஜாத சத்ரு தொடங்கி பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் வரை இதற்குப் பல ஆதாரங்களைக் கூறலாம்.

சோமநாதபுர படையெடுப்பை எதிர்த்துப் போரிட்டவர்களில் முசுலீம்களும் உண்டு. அதே சமயம், காசுமீரை ஆண்ட ஹர்ஷன் என்ற இந்து மன்னன் கோவில்களைக் கொள்ளையடிப்பதற்காக தேவ உத்பவ நாயகர் என்ற அமைச்சரை வைத்திருந்தான். தஞ்சை மாவட்டத்தில் சிவபுரம் என்ற ஊரில் உள்ள கோவிலில் இருந்த நடராஜர் சிலையைக் கடத்தி விற்றதற்காகக் கைது செய்யப்பட்டவர்களுள் அந்தக் கோயிலின் பட்டரும் (பார்ப்பன அர்ச்சகர்) ஒருவர்."

"அவுரங்கசீப், காசி விசுவநாதர் ஆலயத்தை இடித்தார் என்பதை மட்டும் பிரச்சாரம் செய்யும் ஆர்.எஸ்.எஸ்., அவுரங்கசீப் அந்த ஆலயத்தை ஏன் இடித்தார் என்ற காரணத்தை மூடி மறைக்கிறது. அந்த ஆலயத்தின் பார்ப்பனப் பட்டர்கள், ஆலயத்திற்கு சாமி கும்பிட வரும் அழகான இளம் பெண்களை, ஆலயத்திற்கு அடியில் கொண்டு போய், பாலியல் பலாத்காரம் செய்வதை வாடிக்கையாகக் கொண்டு இருந்தனர்.

அவுரங்கசீப்புக்கு கப்பம் கட்டி வந்த கட்ச் பகுதி இந்து மன்னனின் ராணியும்கூட, இப்படிக் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்டார். அதனால் தான், அவுரங்கசீப் காசி விசுவநாதர் ஆலயத்தை இடித்தார். இந்துக் கோயிலை மட்டுமல்ல, கோல் கொண்டா சுல்தான் மக்களிடம் இருந்து கொள்ளையடித்த வரிப் பணத்தை ஜும்மா மசூதியில் பதுக்கி வைத்திருந்தான் என்பதற்காக, அம்மசூதியையை இடித்தவர் அவுரங்கசீப்."

- பேரா. சிவசுப்பரமணியம் (தமிழ் மக்கள் இசைவிழாவில் ஆற்றிய உரையிலிருந்து. (நன்றி: புதிய ஜனநாயகம்)

## மாநில கலந்துரையாடல் கூட்டம்

தந்தை பெரியார் திராவிடர் கழக மாநில அளவிலான கலந்துரையாடல் கூட்டம் 28.3.2004 அன்று ஈரோடு நகரில் நடக்க இருக்கிறது.

இடம் : தமயந்தி பாபு சேட் நகராட்சி திருமணக் கூடம் (பேருந்து நிலையம் பின்புறம்)

காலை 10 மணி

கழகப் பொறுப்பாளர்கள் - தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கொளத்தூர் மணி (தலைவர்)
கோவை இராமகிருட்டினன்,
விடுதலை ராசேந்திரன்
(பொதுச்செயலாளர்கள்)

## தோழர்களே! 'புரட்சி பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு சந்தாக்களைக் சேர்த்திடுவீர்!

### 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை


படிவம் 4 (8வது விதி காண்க)

1. வெளியாகும் இடம் : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம்,சென்னை–23.
2. வெளியாகும் காலம் : வாரம் ஒரு முறை
3. அச்சடிப்பவர்
   பெயர் : எஸ். தீமாஸ்
   இனம் : தமிழர்
   முகவரி : லில்லி சூசை ஆப்செட் 8, முகமது உசேன் சந்து சென்னை–600 014.
4. பதிப்பாளர்
   பெயர் : ஆனூர் செகதீசன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
5. ஆசிரியர்
   பெயர் : விடுதலை இராசேந்திரன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை– 600 041.
6. ஒரு விழுக்காட்டிற்குமேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் : இல்லை

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்த வரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

நாள்: 25–3–2004
இடம்: சென்னை.

(ஒப்பம்)
ஆனூர் ஜெகதீசன்
வெளியிடுபவர்
கையொப்பம்


(1 பக்கம் தொடர்ச்சி)

ஒழித்துள்ளன. இந்தியாவும் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும். ஒருவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு, பின்னர் அவர் நிரபராதி என்று தெரிந்துவிட்டால் அவர் உயிருக்கு யார் பொறுப்பு?' என்றார்.

### மனைவியர் கண்ணீர்

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பிலவேந்திரனின் மனைவி கமலா மேரி, ஞானப்பிரகாசத்தின் மனைவி செல்வமேரி ஆகியோர் தங்கள் குடும்ப நிலையையும், தங்களுடைய கணவர்கள் அப்பாவிகள் என்று கண்ணீர் மல்க பேசினர்.

அதிரடிப் படையினர் கொளத்தூர் மணி, ஹென்றி டிபேன் ஆகியோரை கொச்சைப் படுத்த சுவரொட்டி ஒட்டியிருந்தனர். இதனை மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் கண்டித்தனர்.

சதாசிவம் கமிஷன் அறிக்கையை வெளியிட வேண்டும், கொளத்தூர் மணி, ஹென்றிடிபேன் ஆகியோரை இழிவுபடுத்தி சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்களை மக்கள் கண்காணிப் பகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் இராசன் முன்மொழிய பலத்த கரவொலியுடன் நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து வரும் ஏப்ரல் 14-இல் பெங்களூரில் 'மரண தண்டனை ஒழிப்பு மாநாடு' நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

- புதுவை சுகுமாறன்


Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 25th March 2004


பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.